


# வைகறைவாசம்

## கவிதைத்தொகுப்பு

- மௌலவி காத்தான்குடி பௌஸ்

Digitized by Noolaham Foundation

# வைகறை வாசம்

(கவிதைத் தொகுதி)

மௌலவி காத்தான்குடி பௌஸ்

**வெளியீடு,**
பாவலர் பண்ணை,
ஷரீப் புரக்டர் வீதி,
காத்தான்குடி 02.
(பதிவு இல.: வகி,மா/கஅ/பண்/185 2002)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **Title** | : **VAIKARAI VAASAM** |
| **Subject** | : Collection of Poems |
| **Author** | : Moulavi Kattankudy Fouz<br>"Zaini Manzil"<br>23/6, Wattalpola Road,<br>Henamulla, Panadura. |
| **Publisher** | : Pawalar Pannai<br>Shareef Proctor Road,<br>Kattankudy 02. |
| **Number of Pages** | : 100 |
| **Size** | : 5.5" x 8.5" |
| **Font Size** | : 11 pt. |
| **Paper** | : 70 gsm |
| **Copies** | : 300 |
| **First Edition** | : 19 FEB 2006 |
| **Typeset & Coverpage Design by** | : A. H. Ahamed Aslam<br>"Visual Computer System"<br>No. 391, School Road,<br>Henamulla, Panadura. |
| **Print by** | : Thisara Printers -<br>Gorakana, Moratuwa.<br>Tel. : 038-2297228 |
| **Copy right** | : Reserved |
| **Price** | : 150/= |






# சமர்ப்பணம்

என் அன்புத் தந்தை
ஏ.பி. உதுமா லெப்பைக்கும்
இலக்கியத் தந்தை
பேராசிரியர் அல்லாமா
உவைஸூ க்கும்
இந்நூல்

சமர்ப்பணம் ...



# மதிப்புரை

ஏகன் இறைவன் இணையற்றோன் அல்லாஹு தூயோன் அவனே துணை.

நமது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய சகோதரர் யூ.எல்.எம். பௌஸ் மௌலவி அவர்களுடைய எழுத்தாக்கங்களில் ஒரு பகுதி **"வைகறை வாசம்"** என்ற கவிதைத் தொகுதியாகும். இவ்வெளியீடு, வருவதில் மகிழ்ச்சியடைபவர்களில் நான் முதன்மையானவன். ஏனெனில், மௌலவி அவர்களுக்கும் எனக்கும் அவ்வளவு இறுக்கமான இலக்கிய உறவுகள் பௌஸ் மௌலவி அவர்கள் எனது நண்பனாக இருந்தாலும் ஒரு இலக்கியக் களத்து மாணவன் போன்ற பக்குவத்தில் என்னோடு நடந்துகொள்பவர். தூர இருக்கின்ற காலங்களில் கூட தொடர்புகளைத் துண்டித்துக் கொள்ளாமல் இலக்கிய உறவு வைத்திருப்பவர்.

கடந்த 3 சகாப்தங்களாக எழுத்துலகில் தடம்பதித்து கதை, கட்டுரை, கவிதை, ஹாஷ்யம், துணுக்கு என்பன போன்ற சகல துறைகளிலும் தனது எழுத்தாற்றலால் அடையாளப்படுத்தியவர் பௌஸ் மௌலவி.

பாவலர் பண்ணை 1980களில் பா எனும் கவிதைச் சஞ்சிகையை வெளியிட்ட போது அதன் ஆசிரியராக இருந்து அணி செய்தவர். வீச்சான பேச்சாளர். அடிக்கடி பகிரங்க மேடைகளிலும் வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களிலும் தோன்றி சன்மார்க்க நெறி காட்டுபவர். மௌலவி பௌஸ் அவர்கள் இலக்கியக் களத்தில் கால்பதித்த காலம் தொட்டே தனது பிறப்பிடமான காத்தான்குடியை தன்பெயரோடு இணைத்து காத்தான்குடி பௌஸ் என்ற பெயரில் எழுதி வருகின்றார். மரபாளனாக அறிமுகமான கவிஞர் அவர்கள் ஏனைய வகைக் கவிதைகளை எழுதினாலும் இன்னமும் மரபு வழியை விட்டு விடாமல் அவ்வழி தொடர்வது அவரது சிறப்பாகும். தான் எழுதத் தொடங்கிய 1974ம் ஆண்டு முதல் 2005ம் ஆண்டு வரை எழுதிப் பத்திரிகைகளில் வெளிவந்த கவிதைகளில் இருந்து 65க்கும் மேற்பட்ட கவிதைகளைத் தொகுத்து தனது **வைகறை வாசத்தில்** படைத்துள்ளார்.





கற்பனை மிக்க இக்கவிஞரின் கற்பனைத் திறனுக்கு "கண்ணீர் விடும் மலர்த்தட்டு" கட்டியம் கூறுகிறது. "எலக்ஷன் ஸ்பெஷல்" நகைச்சுவையோடு கூடிய நல்லதொரு ஆக்கப்பாடு. "செக் பொயின்ட்" கவிதை ஐந்து வருடங்களுக்கு முன்னர் எழுதிய தாயினும், அது காலத்தைக் கடந்து காலத்தின் கோலத்தை, மனஓலத்தை நம் கண்முன் கொண்டு வருகிறது.

"பிட்டு வாங்கிய குட்டு" என்ற கவிதை தமிழ் முஸ்லிம் நட்புறவுக்காக நமது கவிஞனின் எழுதுகோலும் சுஜூதுட்டி ருக்கிறது என்பது மனம்கொள்ளத்தக்கது. அவரது **"வைகறை வாசம்"** எனும் இந்நூலை பாவலர் பண்ணையின் முதல் வெளியீடாக வெளியிடுவதில் நாம் பெருமைப்படுகின்றோம். அதன் தலைவர் என்ற வகையில் விஷேசமாக நான் பெருமைப்படுகின்றேன். **வைகறை வாசத்தோடு** பௌஸ் மௌலவி அவர்கள் தன் இலக்கிய வாசனையையும் நிறுத்தி விடாமல் மேலும் பல கவிதை நூற்களை இலக்கிய உலகிற்கு அளிக்க ஆக்கத்திறன் கொள்ள வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

**- இஃது,**
இலக்கியச் சுடர் -
கலாபூஷணம் -
வடகிழக்கு ஆளுனர் விருது பெற்றவர்
**பாவலர் சாந்தி முஹியித்தீன் ஜே.பி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிக்கவிதை!

என்னிடம் ஆசியுரை எழுதிப் பெறுதற்காய்
தன்னாவல் உந்த வரு-தகை சான்ற கவிஞு!
கண்ணியம் சேர் உலமாப் பெருமகனே!
கல்பில் உதிப்பதைக் கவிமழையாய் தூவுகிற
வல்லமை பூண்ட வண்ணக் களஞ்சியமே!
திண்ணிய நோக்கும் சீறிய சிந்தனையும்
நுண்ணிய எண்ணமும் நுண்மான் நுழைபுலத்தின்
பொன்மானைப் பெற்றதனால் பொய்மானை வேரறுக்கும்
பேச்சாற்றல் பெற்றவனே பேராற்று வெள்ளமென...
பிரசங்கம் புரிவதனால் பெரும்பேறு பெரும் மாந்தர்
பின்னாளில் நன்மை பெறுவர் இது உறுதி!
சொன்னாலும் சொல்லாது போயிடினும் இது உறுதி!

நின்னோடு நான் பூண்ட நற்பின் வினைப் பயனாய்
நெஞ்சத்துப் பெட்டகத்துள் நின்வதனம் பதிந்துளது!
எண்ணியதை எண்ணியாங்கு எடுத்தோதும் நின்திறத்தால்
மண்ணின் மேல் வாழுகிற மனிதகுலம் மேன்மையுறும்!
மிம்பர்களில் - மேடைகளில் - மீட்சியுற நீ தருகும்
செம்பொன்னை நிகர்த்த நற்சிந்தனைகள் சித்திரங்கள்
எந்தன் மனத்தில் இடம்பிடித்து ஆழ்கிறது
உந்தன் எதிர்காலம் உரைநடையாய்க் கவிதைகளாய்
உப்பரிக்கை ஏறட்டும் உலக நிலை மாறட்டும்
செந்தேன் குழைத்து நல் ஔடதமாய்த் தருகின்ற
சிந்தனைவாதியே செகம் போற்ற வாழ்க பௌஸ்

○○○○

- தாஜுல் உலூம் - கலாபூஷண,
**அல்ஹாஜ் கலைவாதி கலீல்**
(இல. கல்வி நிர்வாக சேவை முன்னைநாள் உபபீடாதிபதி, தர்காநகர் தேசிய கல்வியியற் கல்லூரி)





## அணிந்துரை

மௌலவி காத்தான்குடி பௌஸ் நீண்டகாலமாகக் கவிதைகள் எழுதி வருகிறார். 1974ம் ஆண்டு அவர் மௌலவி மாணவராய் இருக்கும் போது எழுதிய முதலாவது கவிதை இந்நூலில் முதலாவதாக இடம்பெறுகிறது. இக்கவிதையை எழுதி என்னிடம் தந்தபோது அவரது கவிதா ஆற்றலைக் கண்டு மகிழ்ந்து பாராட்டினேன். அப்போது நான் ஆசிரியராக இருந்து நடாத்திய ஜாமியதுல் பலாஹ் வெளியீடான நூறுல் பலாஹ் சஞ்சிகையில் அதைப் பிரசுரித்தேன். அது அவருக்குப் பெருந்தூண்டுதலாக அமைந்தது. எழுதத் தொடங்கினார் இன்றும் உற்சாகமாக எழுதிக் கொண்டிருக்கிறார்.

பத்திரிகைகளில் மட்டுமல்லாது வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் அவர் கவிதைகள் வழங்கிக் கொண்டிருக்கிறார். இத்தனை இளம் வயதிலும் பல விருதுகளை வென்றிருக்கிறார். பாராட்டுக்களையும் பெற்றிருக் கிறார்.

மௌலவி பௌஸ் மரபுக் கவிதைகளில் காலூன்றியவர். அவற்றின் மூலம் பிரகாசிப்பவர். கருத்தாழமுள்ள கவிதைகளை எழுதுபவர். இந்த நூலில் உள்ள கவிதைகளிற் பெரும்பாலானவை இதற்குச் சான்றுபகர்கின்றன.

நம் நாட்டு முஸ்லிம் இலக்கியவாதிகளில் கவிஞர்களாக உலமாக்கள் ஒருசிலரே தென்படுகின்றனர். உலமாக்களுக்கு உலகம் தெரியாது, தூய தமிழ் புரியாது, எழுதத் தெரியாது என்றெல்லாம் நகைக்கின்றவர்களுக்கு சவாலாக நாங்கள் சிலர் இலக்கியத்தில் உயர்ந்த பாத்திரமான கவிதைத் துறையில் ஆழக்கால் பதித்துள்ளோம். மௌலவி பௌஸ் இதில் குறிப்பிடத்தக்கவர். **“வைகறை வாசம்”** என்ற இக்கவிதைத் தொகுதியில் உணர்ச்சிபூர்வமான பல கவிதைகள் இருக்கின்றன. அவை நமது உள்ளங்களைத் தொட்டு உணர்வுகளை ஈர்க்கின்றன. சமுகத்தின் சீர்கேடுகளைக் களைய வேண்டுமென்ற ஆவேசத்தை ஊட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மௌலவி பௌஸ் ஒரு ஆலிம் என்ற வகையில் பள்ளி வாயல் பணிகளில் தம்மை அர்ப்பணித்துத் தொண்டாற்றும் ஆலிம்கள், முஅத்தின்கள் அனுபவிக்கும் அவலங்கள் அவருக்கு நன்கு தெரியும். அதனால் அந்த அப்பாவிகளின் அவலங்கள் பற்றி பல கவிதைகள் எழுதியுள்ளார். முஅத்தினின் முறையீடு என்ற தலைப்பில் நீண்ட கவிதை எழுதியுள்ளார். அது நவமணியில் தொடராகப் பிரசுரமானது. இந்த நூலில் "பள்ளி இன்ரவியு", "ஆலிமின் மறுபள்ளி", "ஹஸ்ரத்தின் கவலை", "முஅத்தினுக்கான முடிவு" ஆகிய கவிதைகள் இடம்பெற்றுள்ளன. இந்தக் கவிதைகளை அவர் நகர்த்திச் செல்லும் பாங்கு நம் உள்ளத்தைத் தொடுகின்றது.

இந்நூலிலுள்ள எல்லா கவிதைகளும் பத்திரிகைகளில் பிரசுரம் பெற்றுள்ளன. வானொலி, தொலைக்காட்சிக் கவியரங்குகளில் இடம்பெற்றுள்ளன. அதனால் இவை தரமானவை என்று முத்தரை பதிக்கப்பட்டுள்ளன.

கவிதைத்துறையில் கால்பதித்து இம்முயற்சியில் வெற்றி பெற்றுத் திகழும் மௌலவி பௌஸ் அவர்களை வெகுவாகப் பாராட்டுகின்றேன்.

- கவிமணி கலாபூஷணம்,
வானொலி வரலாற்றில் ஓர் ஏடு புகழ்
**மௌலவீ எம்.எச்.எம். புஹாரி (பலாஹி)**





## ஆசிப்பா!
## வைகறை வாசத்திற்கு வாழ்த்துக்கள் கோடி!

சமுதாய வடுக்களெல்லாம் நெஞ்சில் ஏந்தி
சளைக்காது தன்பணியை செய்திடவே
சமுத்திர ஆழமெல்லாம் தன்னில் கொண்டு
சரித்திரத்தைப் படைப்பதற்குத் துணிவு கொண்டு
அமுதான மொழியினிலே சொல்லெடுத்து
ஆதவனாய் கிழக்கிருந்தே வந்தாரிருங்கு
நமதன்புச் சோதரர் காத்தான்குடியின்
கவிப்புதல்வர் **"பௌஸ்"** அவரை வாழ்த்திடுவோம்

❑❑❑❑

**"வைகறையின் வாசம்"** தன்னை நாம் நுகர
வகையாக வழியமைத்து அதனினூடே
வைகறையைப் போலன்றி வேரேயூன்றி
வையகத்தில் படிந்திருக்கும் அழுக்கைப் போக்கி
கைகளிலே தான் பற்றும் பேனா மூலம்
களமமைத்து வெற்றியினை நாட்டிச் செல்லும்
சைகையினைக் காட்டுகின்ற இந்தக் கவிஞர்
செய்கையினை நாம் வாழ்த்திச் செப்பிடுவோம்

❑❑❑❑

முத்தான குர்ஆனின் வழியில் நின்று
மு.ஃ.மினின் வழிகாட்டி அதுதானென்று
சத்தான சங்கதிகள் சொல்லியெங்கள்
சமூகத்தின் சரிவினிலே மனமே வைத்து
பித்தான எம்மவர்கள் சேதி சொல்ல
பிரச்சினைகள் தீர்வதற்கு வழிகாட்டும்
சொத்தான எழுத்தாளர் சிறந்து வாழ
சேர்ந்திங்கு வாழ்த்துரைத்து மகிழ்ந்திடுவோம்

❑❑❑❑



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இருக்கையிலே** பலநூறு கடமை அவர்க்கு
**இலக்கியத்தில்கூட** ரொம்ப பிரியமிருக்கு
**நறுக்கென்று கவிபடைக்கும் சோதரக் கவிஞருக்கு**
**மிடுக்குடனே கவி** வரிகள் பாய்வதற்கு
முறுக்கும்தான் படைக்கின்றாள் மனைவி அவர்க்கு
முனங்காமல் கவி கேர்க்க மகனுமிர்க்கு
கரும்பைப் போல் இனிக்கும் அவர் கவிகளுக்கு
அரும்பிய எம் வாழ்த்துக்கள் கோடியிருக்கு

□□□□

**பெண் எழுத்தாளர்**
**- நூறுல் ஐன் நஜ்முல் ஹுசைன்**
இலக்கியத் தாரகை,
இரத்தின தீபம்,
அகில இலங்கை சமாதான நீதவான்,
ஜூரி சபை உறுப்பினர்,
கொழும்பு மாவட்ட தகவல் அதிகாரி,
அரசாங்க தகவல் திணைக்களம்





## வெளியீட்டுரை

உள்ளத்துணர்வை ஒழியாது வீரமுடன் விள்ளும் கவிஞர்கள் விளைநிலமே நம்பண்ணை! இன்றும் இலக்கைக் குறியாக்கி கடந்த 25 வருடங்களாக இதயத்தால் இணைந்த கவிஞர்களைக் கொண்டு உயிராகச் செயற்படும் சிறந்த அமைப்பே பாவலர் பண்ணை. இஃது பாவலன் சாந்தி முஹைதீனின் சிந்தனையில் துளிர்விட்டதோர் வடிவம். ஆயினும் இதனை இத்துனை காலமும் தூக்கியவர்களிலும் துலக்கியவர்களிலும் **மௌலவீ காத்தான்குடி பௌஸ்** ஒருவர். காத்திரமான படைப்பாளி. சிறந்த கவிஞர்.

இவர் ஆரம்பகாலத்தில் பாவலர் பண்ணையினால் வெளியிட்ட **"பா"** எனும் கவிதைச் சஞ்சிகையின் ஆசிரியராகப் பணியாற்றினார். நல்ல கருத்துக்களும் முன்னேற்றமான சிந்தனைகளும் இவரது எழுத்துத்துறைக்கு உந்துசக்தியாக அமைந்தது.

இவரது இஸ்லாமிய கட்டுரைகள் மித்திரன் வாரமலரில் தொடர்ந்து வெளியிடப்பட்டு நல்ல திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை இந்திய சஞ்சிகைகளில் இவரது ஆக்கங்கள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

இவர் 25 வருடங்களாக எழுதிவரும் கவிதைகளில் சிலதைத் தேர்ந்தெடுத்து நூலுருவில் வடித்து பாவலர் பண்ணையின் முதலாவது வெளியீடாக வெளியிடுவதில் பெருமைப்படுகின்றோம்.

இவரின் ஆக்கங்கள் அனைத்தும் நூலுருப்பெற வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்க கவிஞர், வளர்க பணிகள்.**
**நன்றி.**

**பாவலர் பண்ணை,**
**காத்தான்குடி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை.....

**பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்.!**

இப்போதெல்லாம் புத்தகம் வெளியிடுவதில்லையா? எனக் கேட்கக்கூடியவர்கள் எல்லா மட்டங்களிலும் அதிகரித்து விட்டார்கள். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க எனது இளம் பிராயத்தின் பசுமையான நினைவுகளை மீட்டிப் பார்கின்றேன். காத்தான்குடி ஜாமியதுல் பலாஹ் அறபுக் கல்லூரியில் மூன்றாம் ஆண்டில் மாணவனாக இருக்கும் போதே கவிதை எழுத ஆரம்பித்து விட்டேன்.

எனது எழுத்துத்துறைக்குத் தூண்டுதலாக இருந்தவர்கள் மௌலவி எம்.எச்.எம். புஹாரி பலாஹி அவர்களும் கவிஞர் சாந்தி முஹியித்தீன் அவர்களும் ஆவார்கள். இரவு பகல் பாராமல் என்னை இருவரும் கவிதைத்துறையில் வழிநடாத் தினார்கள். அதன் நிமிர்த்தம் நிறைய எழுதினேன். இந்திய எழுத்தாளர்களான ஹாபிஸ் எம்.கே. செய்யித் அஹமத், ஆளூர் ஜலால், மீலாத் விழாப் புகழ் சஹாப்தீன் காக்கா போன்றோர்களால் பாராட்டப்பட்டேன். விசேடமாக எனது கவிதைகளை ஜாமியதுல் பலாஹ் அதிபர் ஷைகுல் பலாஹ் போன்றோர் பாராட்டினார்கள். அத்தகைய மெருகூட்டலில் இலங்கையின் தேசிய பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி அனைத்திலும் எழுதி வந்தேன். மறைந்த மாமனிதர் திரு. சிவகுருநாதன் எல்.எல்.பி. அவர்கள் தினகரன் மூலம் எனக்கு களம் அமைத்துத் தந்தார். எச்.எம்.பி. முஹைதீன், மானா மக்கீன், பழீல் மாஸ்டர், அல்ஹாஜ் என்.எம். அமீன், எம்.எச்.எம். ஷம்ஸ் உட்பட பலரும் சந்தர்ப்பம் வழங்கினார்கள். ஜும்ஆப் பத்திரிகையில் பலப்பிட்டி அரூஸ், நவமணியில் அல்ஹாஜ் எம்.பி.எம். அஸ்ஹர், ஏ.எல்.எம். சத்தார் (அல்அஸ்லம்), வீரகேசரி மத்திரனில் திரு. ஏ.பி. மதன் ஆகியோர் சந்தர்ப்பம் வழங்கினார்கள். வானொலி முஸ்லிம் சேவையில் அல்ஹாஜ் இஸட்.எல்.எம். முஹம்மத், முஹம்மத் மாஸ்டர், அல்ஹாஜ் அஹமத் முனவ்வர், அல்ஹாஜ் எம்.எம். இர்பான், அல்ஹாஜ் ஹாரிஸ் ஆகியோரை மறக்க முடியாது. தொலைக் காட்சியைப் பொறுத்தளவில் அல்ஹாஜ் ரஷீட் எம்.ஹபீல், எம். யூனூஸ், மபாஹிர் மௌலானா போன்றோரை மறக்க முடியாது.





மேடைகளில் காத்தான்குடி எம்.எம். நூர் மஹைதீன், பலப்பிட்டிய பிரதேச சபை உறுப்பினர் எம்.பி.எம். அப்ராரி, நமது வளம் எம்.கே.எம். அஸ்வர், அஹதிய்யா புகழ் அல்ஹாஜ் ஏ.எல்.எம். அஸ்வர், தென்றல் புகழ் ஏ.ஆர்.எம். ஜிப்ரி போன்றோரையும் ஞாபகப்படுத்துகின்றேன். எனது இலக்கிய முயற்சிகளுக்கு ஏணியாக அமைந்த பேராசிரியர் அல்லாமா உவைஸ் அவர்களை என்றும் என்மனத்திரையில் போற்றியவனாக எனது பசுமை நினைவாக வெளிவந்த கவிதைகளை **"வைகறை வாசம்"** என்ற தலைப்பில் வெளியிடுகின்றேன்.

இந்நூலுக்கு மதிப்புரை எழுதிய கவிஞர் சாந்தி முஹியித்தீன், ஆசிக் கவிதை எழுதிய கலைவாதி கலீல், அணிந்துரை வழங்கிய மௌலவி எம்.எச்.எம். புஹாரி, ஆசிப்பா எழுதிய நூறுல் ஐன், **"வைகறை வாசம்"** எனும் தலைப்பைத் தந்து பின்அட்டை அறிமுகத்தையும் பிரியமுடன் ஏற்றுக்கொண்ட கவிஞர் பதியதலாவை பாரூக், நூர் முஹியித்தீன் ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதோடு, எனது வானொலி உரைகளை மிகக் கவனமாகக் கேட்கும் எனது அன்புத் தாய் ஹாஜியானி ஹஸீனா உம்மா அவர்களுக்கும் எனது எழுத்துத் துறைக்கு பக்கபலமாக இருக்கும் அன்பு மனைவி ஹாஜியானி றிபாயா நூர்தீன் அவர்களுக்கும் எனது ஆக்கங்களை வெட்டி ஒட்டுகின்ற அருமை மகன் அல்ஹாஜ் முஹம்மது ஸைனி அவர்களுக்கும் இந்நூலை கணனி வடிமைத்துத் தந்த எனது அருமை மாணவன் ஐ.ரி.என். தொலைக்காட்சி தமிழ் செய்தி கணனியாளர் ஏ.எச்.அஹமட் அஸ்லம் அவர்களுக்கும், இதனை வெளியிடும் பாவலர் பண்ணை கழகத்திற்கும், இதனை அச்சிட்டுத் தந்த அச்சகத்தார் திஸர பிரின்டர்ஸ் உரிமையாளர் திஸர அவர்களுக்கும், இதனை வாங்கி வாசிக்கும் சகல இலக்கிய நெஞ்சங்களுக்கும் எனது அன்பின் வாழ்த்துக்கள்.

**- மௌலவி காத்தான்குடி பௌஸ்**
23/6, ஸைனி மன்ஸில்,
வத்தல்பொல வீதி, ஹேனமுல்லை,
பாணந்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருளடக்கம்


| | |
|---|---|
| முத்தான குர்ஆன் | 01 |
| உங்களைத் திருத்துவீர் | 02 |
| நீ நினைத்தால் | 03 |
| புதுப்பாதை செல்வோம் | 04 |
| ஷைத்தானின் மி.'.ராஜ் | 06 |
| தாய்க்குலமே | 07 |
| ஒருநாள் | 09 |
| புயல் காற்றே நீ புறப்பட்டு வா | 09 |
| நீங்காத் துயரமே நினைக்கிறேன் | 10 |
| கொண்டாடும் பெருநாள் | 13 |
| மரணம் | 13 |
| ஹஜ்ஜுக்குப் பயணம் | 14 |
| படித்து வாழ | 15 |
| ஈருலகப் பேரொளி | 16 |
| ஸக்காத் கொடுமை | 17 |
| உனக்காக | 19 |
| தொழிலுக்குப் பயணம் | 20 |
| ஹஜ் | 21 |
| பொலிவிழந்த மரகதங்கள் | 23 |
| சாத்தான் சல்மான் ருஸ்தி | 24 |
| மாலைப் பொழுதில் மார்க்கம் எங்கே? | 25 |
| தலைப்புக்கள் மாறினால் | 27 |
| ஹஜ் ஒரு வரலாறு | 28 |
| திருடர்கள் | 30 |
| உனக்கும் ஓய்வுண்டு | 31 |
| நல்லவனாய் வாழ்ந்திடு | 32 |
| நானோர் நடைப்பிணம் | 32 |
| காலமும் காக்கும் கல்வி | 33 |
| சரித்திரம் படைக்கிறோம் | 34 |
| திருந்தும் நிலை வேண்டும் | 35 |
| மணிவிளக்கு | 36 |
| தோட்டத்தார் துயரங்கள் | 37 |
| படித்தெழுவாய் பரீட்சைக்கு | 38 |
| சுவனத்து ஷுஹதாக்கள் | 39 |
| காந்தியின் இறப்புக்கு கண்ணீர் விடும் மலர்த்தட்டு | 40 |
| சுபஹின் அதான் | 42 |
| பகிஷ்கரிப்பு | 43 |
| றஸுலுல்லாஹ்வின் மனித நேயம் | 44 |
| முஅத்தினுக்கான முடிவு | 46 |
| பள்ளி இன்ரவியு | 48 |
| ஹஸ்ரத்தின் கவலை | 49 |
| அண்ணல் நபியே | 49 |
| ஆலிமின் மறுபள்ளி | 50 |
| ஆயிரமாம் ஆண்டின் அறிவுரை | 51 |
| எலக்ஷன் ஸ்பெஷல் | 52 |
| அற்புத இரவு லைலதுல் கத்ர் | 53 |
| பாவத்தைக் கரைக்கும் ரமழான் | 54 |
| குர்ஆனின் குரல் | 56 |
| உம்மத்தே விழித்தெழு | 57 |
| செக் பொயின்ட் | 59 |
| மேன்மை நபியின் மிஹ்ராஜ் | 61 |
| நீதியில்லை | 62 |
| அமெரிக்காவிலிருந்து ஆப்கான் வரை | 63 |
| குழந்தை மனம் | 64 |
| ஏந்தல் நபியை எங்கு காண்போம் | 65 |
| தாய் முத்தம் | 66 |
| மனித நலம் காணும் புனித நோன்பு | 66 |
| மனஅளவு மதிப்பீடு | 68 |
| பிட்டு வாங்கிய குட்டு | 69 |
| இருநூறு ரூபாவும் இருநூறு கேள்வியும் | 70 |
| புஸ், புஷ், புஸ் | 71 |
| ரமழான் பிறை பிறந்தது | 72 |
| நோக்கம் நுணுக்கம் | 75 |
| நோன்புப் பெருநாள் வருக | 75 |
| முஹர்ரம் புத்தாண்டே | 77 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தான குர்ஆன்.!

அறிவுக்கோர் அடிப்படையாய்
அகிலத்தின் கண்ணேதான்
அதிசிறப்பைப் பெற்றொளிரும்
அருள் வேதம் குர்ஆனே!
நெறிகளையும் நேர்மையையும்
நிலத்தோர்க்கு இறைக்கின்ற
நிகரில்லாப் பெருநூலாய்
நிற்பதுவும் குர்ஆனே
வறியோரும் பெரியோரும்
வையகத்திற் சமமென்ற
வழமுறையை வகுத்தளிக்கும்
வான் மறைதான் குர்ஆனே!
சரியதையும் பிழையதையும்
உறு முறையில் உணர்த்துமொரு
சத்தான பெருவேதம்
முத்தான குர்ஆனே!

○○○○

இருளகற்றி ஒளிதுலக்கும்
இறைவேதம் குர்ஆனே!
இகத்தோர்க்குப் பயன்விளைக்கும்
இணையற்ற குர்ஆனே!
அருள்பொழிந்து அகிலத்தார்
அகங்களையே ஆட்கொண்டு
அணிவழியைக் காட்டுமொரு
மணிவேதம் குர்ஆனே!
பொருளீட்டும் பான்மையையும்
புகழ்மனை வாழ்வொழுங்கினையும்
பொது வாழ்க்கைப் பண்பினையும்
புரியாட்சி முறையினையும்
அருமையுறக் காட்டுமொரு
பெருவேதம் குர்ஆனே!
அதிசிறப்பாம் நெறிகளைத் தான்
அளிக்குமுயர் குர்ஆனே!

○○○○

**இக்கவிதை ஜாமியதுல் பலாஹ் அறபுக் கல்லூரியில்**
**மூன்றாம் ஆண்டு மாணவனாகக் கல்வி பயிலும் போது**
**05-07-1974ல் நூறுல் பலாஹ் எனும் மலரில் பிரசுரிக்கப்பட்ட முதல் கவிதை**
***நன்றி : நூறுல் பலாஹ்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களைத் திருத்துவீர்!

கண்ணியம் தவழும் ஆலிம்
கடமையில் பிறழ்ந்தாரென்று
கிண்டலும் பண்ணி மிக்க
கீழவராக்குகின்றீர்!

○○○○

போதுமே போதும்! போதும்!
புவியினில் ஒருவர் புரியும்
ஏதோவோர் தவறினாலே
எல்லோர்க்கும் ஏச்சும் பேச்சும்!

○○○○

ஒருசிலர் செயலால் எல்லா
உலமாக்கள் தம்மைத் தாக்கும்
குறுமதிச் செய்கை கண்டு
குமுறுதே உள்ளமெல்லாம்

○○○○

ஆலிமின் குறையைக் காணும்
அன்பரே உங்கள் வாழ்வு
போலிகள் வாழ்வாயிற்றே
புன்மைகள் நிறைந்ததாச்சே!

○○○○

உங்களைத் திருத்திக்கொண்டு
உயர்வினைப் பெற்ற பின்னர்
சங்கையே மிக்க உலமா
சமூகத்தைத் திருத்த வாரீர்!

○○○○

**நன்றி : 31-07-1975**
**தினகரன் ஆலமுல் இஸ்லாம்**





# நீ நினைத்தால்....!

வேஷம் தரித்தேதான்
கோச மெழுப்பிடும்
நாத்திக மானிடனை - அல்லாஹ்
உன் ஆட்சியில் வைத்துள்ளாய்
இன்றே அழித்திட முனைவதில்லை
இது உனதருளெனக் காட்டுகின்றாய்

○○○○

வேதனை வாழ்விலும்
சோதனை வாழ்விலும்
போதனை மறப்பவனை - அல்லாஹ்
உன் ஆட்சியில் வைத்துள்ளாய்
இன்றே அழித்திட முனைவதில்லை
இது உனதருளெனக் காட்டுகின்றாய்

○○○○

வாட்டி வதைத்திடும்
ஆட்சிதான் ஏனென
கேட்டிடும் மானிடனை - அல்லாஹ்
உன் ஆட்சியில் வைத்துள்ளாய்
இன்றே அழித்திட முனைவதில்லை
இது உனதருளெனக் காட்டுகின்றாய்

○○○○

பட்டமும் பதவியும்
பெற்றிடும் வேளையில்
மட்டுமே நினைப்போரை - அல்லாஹ்
உன் ஆட்சியில் வைத்துள்ளாய்
இன்றே அழித்திட முனைவதில்லை
இது உனதருளெனக் காட்டுகின்றாய்

○○○○

**நன்றி : 1977 ஏப்ரல் -**
**புதுப்பாதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுப்பாதை செல்வோம்..!

எட்டாறு மாளிகையைக் கட்டிச் சீமான்
பட்டங்கள் பல தேடிப் பாரின் கண்ணே
சட்டமிடும் அரசாரின் கொள்கை தம்மைத்
திட்டத்தால் நாள்தோறும் மீறிச் சென்றால்....

○○○○

வாழவரும் சந்ததிகள் அழிந்து செல்லும்
வளம் சேர்க்கும் வாழ்வு பல ஒடிந்துபோகும்
ஊளையிடும் பணக்காரக் கும்பல் தம்மை
நாளை வரும் சந்ததியார் திருத்தி நின்றால்

○○○○

ஏழைகள் எதிர்காலம் வளரலாகும்
நாளை ஒரு சமுதாயம் தோன்றலாகும்
பாலையினில் பல வாழ்வு செழிக்கலாகும்
கோழைகள் குன்றிட்ட உலகமாகும்

○○○○ என்றாலும்.....

அரசுள்ளே அமைந்துள்ள அமைச்சரெல்லாம்
சுரங்கத்து வழிதன்னைக் காட்டிச்சென்று
நரகத்துக் குழிக்குள்ளே தள்ளிவிட்டு
இருப்போரின் நல்வாழ்வைக் குலைத்துச் சென்றால்

○○○○

நாடெல்லாம் குழப்பத்தின் வழியே செல்லும்
பாடெல்லாம் பங்கத்தில் மூழ்கலாகும்
காடெல்லாம் கடுத்தீயில் எரியலாகும்
வீடெல்லாம் போர்க்களமாய் மாறலாகும்

○○○○

ஏங்குகின்றேன் தவிக்கின்றேன்
இது நீங்க வேண்டுகின்றேன்
ஆங்காங்கே இஸ்லாத்தின்
அணிவாழ்வைக் கேட்கின்றேன்

○○○○

இனச் சண்டை வையகத்தில் எழும்புமானால்
சனங்களிடை சச்சரவைத் தோற்றுவிக்கும்
பிணக்காடாய் வையகத்தை மாற்றுவிக்கும்
கணக்கில்லா மானிடரை மடியச் செய்யும்

○○○○ ஆனதினால்.....





எல்லோரும் நல்லோராய் வாழவேண்டும்!
நல்மதமாம் இஸ்லாத்தைப் பரப்ப வேண்டும்!
தொல்லுலகின் தொல்லைகள் தொலைய வேண்டும்!
சொல்லாளர் இஸ்லாத்தில் பிறக்க வேண்டும்!

○○○○

மது அருந்தி மங்கையரின் நட்பை நாடி
எதுவழியோ அதைவிட்டு எங்கோ சென்று
இதமான மங்கையரைக் கெடுக்கும் போது
எதனாற்றான் வையகத்தில் சிறப்பு ஓங்கும்?

○○○○

மங்கையரின் செய்கைகள் மாறாவண்ணம்
எங்குந்தான் குடியாட்டம் நில்லாவண்ணம்
பக்கங்கள் பாரெங்கும் பரவிநின்று
தங்கமுயர் கொள்கைகள் தாண்டுபோயின்

○○○○

குடியாட்டம் கொண்டாட்டம் தலையெடுக்கும்
இடிமின்னல் முழக்கம் போல் கொலை நடக்கும்
கொடிதான குற்றங்கள் பழியே சூழ்ந்து
மடிவார்கள் மங்கை பலர் வெறியால் மட்டும்

○○○○ இவையால்.....

ஏங்குகிறேன் தவிக்கின்றேன்
இது நீங்க வேண்டுகின்றேன்
ஆங்காங்கே இஸ்லாத்தின்
அணி வாழ்வைக் கேட்கின்றேன்

○○○○

பணவெறியும் பதவியதன் வெறிகள் மற்றும்
இனவெறியும் இதனோடு சேர்ந்து நின்று
குணந்தன்னைக் குலைத்தேதான் மனதை மாற்றி
அணி வாழ்வை ஆழத்தில் ஆழ்த்தும் போது

○○○○

இப்பாரில் இஸ்லாந்தான் வளருமாமோ?
ஒப்பற்ற உத்தமரை நினைப்பார் யாரோ?
கப்பி வரும் கறைதன்னைத் துடைப்பார் யாரோ?
செப்புங்கள் வெட்கந்தான் என்ன செய்வோம்?

○○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சத்தின் எல்லையிலே நின்று மக்கள்
மெச்சுமொரு இஸ்லாத்தின் கொள்கையில்லாப்
பிச்சளத்தில் பிறந்தான்போல் வாழும் போது
இச்சாரார் செய்யுமொரு பணிதான் என்ன?

○○○○ எனவே.....

இன்னிஸ்லாம் இகமெல்லாம் ஒளிர வேண்டும்
பண்பாட்டில் சிறந்ததுவே பரவ வேண்டும்
சொன்னதினில் நிறைவில்லாக் கருத்தை நீக்கி
எந்நாளும் புதுப்பாதை செல்வோம் வாரீர்!

**நன்றி : 1977 ஜூன்**
**புதுப்பாதை இதழ்**

# ஷைத்தானின் மிஃராஜ்!

முன்னொரு காலந் தன்னில்
முதிர்ந்த வய தாபித் ஒருவர்
தன்னந் தனியாகத்தானே
தகைமையாய் வணங்குங் காலை
உன்னியே வந்தான் ஷைத்தான்
உறுதியாய் வணங்கும் அந்தக்
கண்ணிய மனிதர் தம்மின்
கருத்தினைக் கெடுக்கத்தானே!

○○○○

விண்ணகம் சென்றங்கேதான்
விந்தைகள் காண வாரும்
கண்களைக் நன்றாய்க் கட்டிக்
கழுதை மீ தேறிக்கொள்ளும்
இன்னவா றுரைத்தான் ஷைத்தான்
ஏறினார் கழுதை மீதே
விண்ணகம் என்றே சொல்லி
வேறிடம் கூட்டிச் சென்றான்

○○○○





குப்பையின் மேட்டிற்குத்தான்
கூட்டியே சென்றான் ஷைத்தான்
தப்புக்கள் செய்யும் அந்தத்
தறுகணன் ஷைத்தான் செய்த
தப்பினுள் மாட்டிக்கொண்ட
தவத்தவர் தவிக்கலானார்
இப்பெரும் புதினங் கண்டோர்
எள்ளியே நகைக்கலானார்

○○○○

கடும் தவம் புரிந்திட்டாலும்
கல்வியே இல்லையாகில்
மிடுக்குடன் ஷைத்தான் வந்து
மிக மிகத் துன்பஞ் செய்வான்
தொடுத்திடும் ஷைத்தான் தொல்லை
தொலைந்திட வேண்டுமாயின்
கடும் பயன் சேர்க்கும் நல்ல
கல்வியே வேண்டும்! வேண்டும்!

**நன்றி : 1977 ஜூலை**
**புதுப்பாதை இதழ்**

# தாய்குலமே..!

வாய்விட்டு அழுகிறோம்
உங்கள்
சேய்களுக்கு சியோனிஷ்ட்
வாதிகள் செய்யும்
கொடூர அநீதிகளைக்
கொஞ்சம் அறிந்துள்ளோம்

○○○○

சுடுவெயிலில் - பலஸ்தீன
மண்வெளியில்
இழுத்து உங்கள் மார்புகளில்
ஏற்பட்ட
பழுத்த காயங்களால் - நீங்கள்
அழும் ஓசையைக் கேட்கிறோம்

○○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருத்துவ மனைகளில் - உங்களது
கருப்பைகளை
அறுத்துப் பிய்த்து
தெருக்களில் எறியும்
அரக்கர்களின்
மிருகத்தனத்தை
அறிகிறோம்

OOOO

பலஸ்தீனத் தாய்மார்களே
விடுதலைக் காலம் வருகிறது
நாடெங்கும்
பலஸ்தீனப் பாலம்
அமைகிறது
ஓலமிட்டு அழும்
உங்களுக்கு வாழ்வு பிறக்கின்றது

OOOO

சியோனிஸ வாதிகளின்
அயோக்கியத்தனத்தால்
உங்கள் நம்பிக்கையை
இழக்காதீர்கள்
எங்கள் பக்கமே
இறைவன்
இருக்கிறான்.

OOOO

நன்றி :
30-09-1977
தினகரன் - ஆலமுல் இஸ்லாம்





# ஒருநாள்..!

விரும்பி உடுத்தாலும்
பொருந்தி உடுத்தாலும்
தெருவில் - ஏழை
திரியும் நாள் ஒரு நாள்!
பெருநாள் அன்று
திருநாள்!
மறுநாள்!
வெறுநாள்!

OOOO

நன்றி : கலைத்தீபம்
01-10-1978

# புயல் காற்றே நீ புறப்பட்டு வா..!

புயல் காற்றே - நீ
புறப்பட்டு வா
வியக்கும் நிலையை
விரைவாய்த் தா

OOOO

சூறாவளி அடித்துச்
சோகம் கண்டவரும்
ஆறாத் துயரினிலே
ஆழ்ந்து தவிப்பவரும்
வேறாய் ஒரு பக்கம்
விம்மித் தவிக்கின்றார்
மாறாய் ஒரு கூட்டம்
மலிந்து வருகின்றார்

OOOO

மக்கள் கடை உடைத்து
முழுப்பொருளும் களவாடி
துக்கப்பட மனேஞர்
தோழில் சுமந்தவர்கள்
வெட்கமின்றித் - தெரு
வீதியினால் சென்றார்கள்
பக்கத்து வீடுகளில்
பதுக்கி வைத்தார்கள்

OOOO

பருப்பு மா சீனி
பெற்றி பால்வடிகள்
செருப்பு போல்பேனா
சூதர் காடுகளும்
பிரீதிப்பக்கட்டு கரண்டி
பார்சோப்புக்கள்
பெரிய றோளுடைய
பொலித்தீன் பேக்குகளும்
பக்கத்து வீடுகளில்
பதுக்கி வைத்தார்கள்

OOOO

சங்கக் கடைக்குச்
சதி மோசம் செய்தார்கள்
இந்நிலையையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கும் கடல் அலையும்
புயல் சீறுவதும்
எங்கும் சென்றிடுமோ?
இங்கு வந்திடுமோ?
இந்த நிலை காண
இதோ ஓரழைப்பு

புயல் காற்றே - நீ
புறப்பட்டு வா!
வியக்கும் நிலையை
விரைவாய்த் தா!

OOOO

இக்கவிதை
1978ம் ஆண்டு வீசிய கோரச் சூறாவளியை அடுத்து காத்தான்குடி பகிரங்கச் சந்தையில் நடைபெற்ற கவியரங்கில் பாடிய கவிதையில் ஒரு பகுதி

# நீங்காத் துயரமே நினைக்கின்றேன்..!

**மலஸ்கேலிய விமான விபத்து நினைனவுக் கவிதை**

இந்தோனேஷியா வென்னும் நாடிருந்து
இறையோனே உனை வணங்க மக்காவிற்கு
வந்துற்ற மக்களையா இலங்கைப் பக்கம்
வரச்செய்தாய்! வல்லோனே அல்லாஹ்! அல்லாஹ்!
உந்தனது நாட்டத்தைச் செய்வதற்கு
ஊரிருந்து விமானத்தில் புறப்பட்டோரோ
அந்தரத்தில் மரணத்தை அரவணைத்தார்
அன்னாரை நினைத்தாலே துக்கம்! துக்கம்!

OOOO

உச்சியிலே மோதுண்ட கப்பல் அந்த
உயர்ந்தோங்கும் மலைதன்னை உடைக்கலாச்சு!
அக்கணமே அதில் உள்ள மக்கள் தம்மை
ஆங்காங்கே சிதறித்தான் அடிக்கலாச்சு!
பச்சையுற உயர்ந்துற்ற மரங்கள் கப்பல்
பற்றியதால் முடிவுற்று எறியலாச்சு!
அச்சுறுத்தும் மிருகங்கள் மனிதர் போட்ட
அழுகுரலாங் அங்கிருந்து ஓடலாச்சு!

OOOO

அரை உயிரில் கிடந்தோரும் பதை பதைத்து
அவ்வேளை உயிர்தன்னைத் துறக்கலானார்
பிறந்துற்ற மேனியுடன் சிலர்கள் அங்கு
பிடவைகள் இல்லாமல் கிடக்கலானார்
விறகுகளின் முள்ளுக்குள் அகப்பட்டோர்கள்
வீரிட்டு உயிரேதான் துறக்கலானார்





மறுநாளின் மத்தியிலே மக்கள் கூட்டம்
மலைமீது சென்றேதான் பறக்கலானார்

OOOO

உள்செல்ல வழி அங்கு இருக்கவில்லை
உயர் மலையில் ஏறிடவும் பாதையில்லை
எல்லைக்கு வந்தவர்கள் இறந்தோரைத்தான்
இதுவரையும் உள்சென்று காணவில்லை
புல்வெட்ட ஒரு கோஷ்டி முன்வந்தார்கள்
புரட்டிடவே பாறைகளை மற்றக்கோஷ்டி
கல்வெட்டி உள்நுழைய அரசாங்கத்தின்
காவலரும் படையினரும் அங்கு வந்தார்

OOOO

படையினரின் பாதங்கள் பட்டுப் புல்மேல்
பாதைகள் பலவாறாய்த் தோன்றலாச்சு
உடைத்து மலைக்கள்ளுள்ளே நுழையும் போது
உருவங்கள் சில அங்கு தோன்றலாச்சு!
தடைகளினை நீக்கியதாய் நுழையும் போது
"தஸ்தாவேஜ்" பாஸ்போட்கள் கிடைக்கலாச்சு!
இடைவழியில் இறந்தோரின் நாற்றத்தாலே
ஏராள மிருகங்கள் வரவுமாச்சு!

OOOO

இரைச்சலிட்டு கூவைத்து இராணுவத்தார்
ஏராள மிருகத்தைத் துரத்தலானார்
குறைகூறும் அளவுக்கு மக்கள் அங்கு
கூடாரம் அடித்திரவில் தங்கலானார்
நிறைவான ஹஜ்ஜாஜ்கள் கொண்டு வந்த
நிகரற்ற பொருட்களைத் திருடலானார்
முறையாக முன்நின்ற வீரர் கூட்டம்
முழுவரையும் விட்டங்கு அகற்றலானார்

OOOO

உலமாக்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்தார்
உயர்வான தொரு நல்ல முடிவு செய்தார்
நலமான ஒரு பாதம் கண்ட போதும்
நல்லடக்கம் செய்துவிட வேண்டும் என்றார்
வளமான எதிர்காலத் தொண்டரெல்லாம்
வாரித்தான் அவ்வேளை அழைக்கப்பட்டார்
பலமான தொண்டாற்றும் வேளை அங்கு
பல "மையித்" கண்டேதான் அடக்கலானார்

OOOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு மரத்தின் உச்சியிலே முழங்கால் மட்டும்
உடன் கண்டு அதையுந்தான் அடக்கம் செய்தார்
கருங்கல்லுப் பாறைக்குள் ஹஜ்ஜாஜ் ஒருவர்
கருகித்தான் கிடந்தவரை அடக்கம் செய்தார்
மிருகங்கள் தின்றேதான் மிச்சமான
மேனியுடன் கிடந்தோரும் அடக்கப்பட்டார்
முறுக்கிட்ட கைக்குட்டை வாயில் வைத்து
முகம் கவிழக் கிடந்தோரும் அடக்கப்பட்டார்!

OOOO

குளிராடை அங்கேதான் கிடக்கக் கண்டார்
கொண்டுவந்தவைகளினை குவிக்கலானார்
ஒளிவீசும் பலவர்ணத் "தஸ்பீஹ்" மணிகள்
ஒன்றொன்றாய்ப் புறக்கித்தான் குவிக்கலானார்
தெளிவாகக் கண்டெடுத்த விமானப் பொருளை
திரட்டித்தான் திரளாகக் குவிக்கலானார்
எலும்புகள் தசைகளினை மூட்டை கட்டி
இழுத்தேதான் மலையடியில் குவிக்கலானார்

OOOO

உடன் மையித் ஒழுங்காகச் சுத்தி செய்து
ஒரு கூட்டம் தொழுகைக்கு இடமமைத்தார்
அடந்தங்கே வளர்ந்துற்ற காட்டினுள்ளே
அழகாகத் தொழுமிடத்தை அமைக்கலானார்
படப்பிடிப்பு பத்திரிகையாளரெல்லாம்
பல கூட்டம் அங்கேதான் அமைக்கலானார்
இடமெங்கும் இராணுவப் பாதுகாப்பை
இடம்பெறவே பல கூட்டம் அமைக்கலானார்

OOOO

இப்புனித பயணத்தை மேற்கொண்டோர்கள்
இடைவழியில் மலை மீது சிக்குண்டாலும்
ஒப்பற்ற ஷஹீத் என்னும் பட்டம் தன்னை
ஒரு மூச்சில் பெற்றிட்டார் ஆமாம் எந்தன்
ஒப்பற்ற இறையோனே இவர்களைத்தான்
உயர்ந்தோங்கும் "பிர்தௌஸுல் அஹ்லா" என்னும்
செப்புமுயர் சிறந்தோங்கும் சுவனம் தன்னில்
சிறப்பாக்கி வைக்கத்தான் பிரார்த்திக்கிறேன்

நன்றி :
ஜூம்ஆ இதழ் 1977







# கொண்டாடும் பெருநாள்..!

அருள்மணக்கும் ரமழானின் ஆரம்பத்தில்
அருள்வேண்டி அகம் குளிர்ந்து இரண்டாம் பத்தில்
மறச்செயலால் ஏற்பட்ட பாவம் நீங்க
மாஇறைவன் தனை வேண்டி மூன்றாம் பத்தில்
நரகத்தின் எரிகுழியை விட்டுக் காக்க
நாயனின் இறைஞ்சுதலை இறைஞ்சி வேண்டி
சரியாக முழு நோன்பும் நோற்று வந்த
சங்கை மிகு முஸ்லிமின் பெருநாளின்று!

OOOO

தராவீஹ் தொழுகையினைத் தாம் தொழுது
தனித்தொழுகை வித்ரையும் நிறைவு செய்து
திருமறையைத் தினந்தோறும் உணர்ந்து ஓதி
திக்ருடைய மஜ்லிஸில் இரவைப் போக்கி
பெருமானார் வரலாற்றை எடுத்துரைக்கும்
பெருமை மிகு தளங்களிலே அமர்ந்து நாளும்
வரலாற்றுத் திருப்பத்தை அமைத்துக்கொண்ட
வாஞ்சை மிகு முஸ்லிமின் பெருநாளின்று

OOOO

நன்றி : தினபதி - 05-09-1978

# மரணம்..!

அன்றொருநாள் நபியீஸா அடர்ந்த ஒரு காட்டினிலே
அயராது நடக்கின்றார் அதுபோழ்து அவ்விடத்தே
நின்றொருவர் ஒட்டகைகள் மேய்க்கின்றார் - இக்காட்சி
நிறையுளத்தார் நபியீஸா சிந்தையினைத் தொட்டதுவே
ஒன்றாகச் சேர்ந்தங்கே மேய்த்திருந்த ஒட்டகையில்
ஒன்றதனைப் பிடித்து நபி "ஓ ஒட்டை நீயொரு நாள்
சென்றொழிவாய் மரணத்தின் வாயிற்றான் உணர்" என்று
செவியினிலே செப்பிய பின் தொடர்கின்றார் பயணத்தை

OOOO

பெருமகனார் ஈஸாவின் பேருரையைக் கேட்ட
பேய் அறைந்த நிலையினிலே ஒட்டகமோ மாறியது
ஒருநாளும் ஒட்டகமோ உணவருந்த மறுத்திற்று
ஒரு குவலை நீர்த்தானும் பருகாமல் படுத்திற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தனிமை இடத்திற்றான் ஒதுங்கிப்போய் கிடந்திற்று
உடலதுவோ மெலிந்ததுவாய் உருக்குலைந்து போயிற்று
மறுமுறையும் ஒருநாளில் மாநபிகள் ஈஸாவும்
மாவனத்தின் அவ்வழியால் நடைபோட்டுச் செல்கின்றார்

OOOO

இவ்வொட்டகைதனைக் கண்ட இறைத்தூதர் நபியீஸா
ஏகினார் வந்த வழி எதுவேனும் பேசாது
நல்லவராம் நபி தாஹா இது குறித்து ஒருநாளில்
நவின்றனரே ஹதீஸொன்றை நாமெல்லாம் பயன்காண
பொல்லாத மரணத்தில் பொதிந்துள்ள தீங்குகளைப்
புத்தியுள்ள மனிதர்கள் தெரிந்தது போல் - பகுத்தறிவு
இல்லாத மிருகங்கள் தெரிந்திடுமேல் வையத்தில்
எம்மிருகந்தானும் பருத்திருக்கக் காணீரே

OOOO

**இக்கவிதை 01-01-1980ல் பாவலர் பன்னையினால் வெளியீடப்பட்ட "பா" எனும் கவிதைப் பத்திரிகையில் வெளி வந்தது. இப்பதிரிகையின் ஆசிரியர் காத்தான்குடி பௌஸ் ஆவார்.**

# ஹஜ்ஜுக்குப் ப(ய)ணம்!

கங்காணிக் காக்காவும்
கலந்தர் சாஹிபும்
பங்கிலே தொழில் செய்து
பாதியிலே கங்கானி மௌத்து
அங்கணமே கலந்தர்
அனைத்தையும் சுருட்டிச்
சங்கைமிகு ஹரத்திற்கு
சவாரி செய்கின்றார்

OOOO

மாஜரின் தொட்டுப்
பாண் திண்ட ரவூபும்
ஏஜன்ஸி திறந்து
இருபது பேரை
ஆஜராக்கி
அவர் பெயராலே
ஹாஜியாராகக்
க.'.பா சென்றார்!

OOOO





தப்புக்கள் செய்வார்
தலையில் தொப்பி
ஒப்பினால் பொய்
ஊற்றெடுத்தோடும்
சப் ஏஜன்ஸில்
சேர்ந்த பணத்தில்
செப்பியே எம்மிடம்
சென்றார்
ஹஜ்ஜு!

OOOO

சந்தைக்குள்ளே
சீட்டுக்கடையில்
பந்தயக் குதிரைக்குப்
பணத்தைக் கட்டி
முந்திடக் குதிரை
முப்பதுனாயிரம்
விந்தையாய் சாலிஹ்
விரைந்தார் க.'.பா!

**நன்றி**
**ஜாமியா நழீமியா மறைவழி இதழ் - துல்ஹஜ் 1408**

# முடித்து வாழு..!

கற்றோரைக் கனம் பண்ண வேண்டும்
கற்பதிலே கடும் முயற்சி வேண்டும்
கற்றோர்கள் கல்லாதார் நிலையைக்
கட்டாயம் கவனித்தல் வேண்டும்

OOOO

கல்லாதார் கற்றோரை நாடி
கரைகாணாக் கல்வியினைத் தேடி
நல்லறிவை மற்றார்க்கு ஊட்டி
நலம் காண்பார் புகழ்மாலை சூடி

OOOO

கல்விக்குக் கரை கண்டோரில்லை
கல்வியின்றேல் வாழுவது தொல்லை
கல்விமான் உள்மனது வெள்ளை
கற்றறியத் துணியுங்களேன் பிள்ளை

OOOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தால் அழிந்துவிடும் காசு!
கரைந்து விடாச் செல்வமே கல்வி!
பூவுலகில் அலி றழியோ சொல்லி
போய்விட்டார் நீ செல்லு பள்ளி!

○○○○

நன்றி
**1985 தினகரன் - கல்வி அரங்கு**

# ஈருலகப் பேரொளி!

ஈஸா நபியின் எதிரிகள் எல்லாம்
சூழ்ந்து நிற்கையிலே..
நாசூக்காக இறைவன் நபியை
நாடியழைக்கையிலே..
தேசம் முழுதும் திசை திரும்பி
தீனை மறக்கையிலே..
மோசச் செயலால் உலகம் இருளில்
மூழ்கும் போதினிலே..
மாட்டின் வாலில் தீயை மூட்டி
மழையை எதிர்பார்ப்பர்
வீட்டின் முன்னே தீயை மூட்டி
விருந்துக் கழைப்பார்கள்
காட்டின் நடுவே சிசுவைப் புதைத்து
களிப்புற்றிருப்பார்கள்
கூட்டுக் கிளியின் கதையை நம்பி
குறிகள் சொல்வார்கள்
தோட்டம் வந்து காக்கைக் கரையின்
தொடர்பை யூகிப்பர்
ஆட்டம் போட்டு மதுவின் ரசத்தால்
அநீதி விளைவிப்பர்
கூட்டத்தோடு வாட்கள் ஏந்தி
கொலையும் செய்வார்கள்
பாட்டில் வசைக் கவிகள் புணைந்து
பாடி மகிழ்வார்கள்
போட்டி போட்டு பெண்ணின் உடம்பில்
புணரப் போவார்கள்





இந்த நிலையில் அரபுக் கண்டம்
இருண்டு கிடக்கிறது
செந்நீர் சிந்தி சீர்குலைந்து
சிறப்பை யிழக்கிறது
தந்தை முகத்தில் இலங்கி நின்ற
தனியோர் ஒளிக்கீறல்
சிந்தை ஆமினாவின் வயிற்றில்
சிசுவாய் மாறியது!
அந்தோ நபிகள் ஆமினாவின்
ஆணி முத்தாக
வந்தார் இந்த வையமீதில்
வல்லோன் நபியாக
அந்தத் தந்தை ஒளியின் கீறல்
அண்ணல் வதனத்தில்
சொந்தமாக இலங்கி நின்று
சுடரை வீசியது!

○○○○

**இக்கவிதை 06-12-1984ம் ஆண்டு மீலாத் விழாவை முன்னிட்டு இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் நடைபெற்ற கவியரங்கில் வாசித்து ஒலிபரப்பிய கவிதையில் ஒரு பகுதியாகும்.**

# ஸக்காத் கொடு(மை)!

செல்வந்தர் பொருட்களைக் கணக்குப் பார்த்து
சீர்குலையும் நிலைகொண்ட ஏழைகட்கு
அள்ளி வழங்கிடும் அருமை மாதம்
அருள் பூக்கும் புனித ரமழானாகும்!

○○○○

உள்வீட்டில் முதலாளி இருந்து கொண்டு
ஒருவருமே இல்லையெனச் சொல்ல வேண்டாம்!
எல்லாமே கொடுத்ததன் பின்னால்தானே
இப்போது வந்தீர்கள் என்றும் வேண்டாம்!

○○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெருத் தெருவாய் ஏழைகள் ஸக்காத் வாங்க
திரிகின்ற நிலையும் நமக்கு வேண்டாம்!
பெரியார்கள் வீட்டினிலே பிச்சை கேட்டு
பகல் இரவாய்த் திரிவதும் இனிமேல் வேண்டாம்!

OOOO

மாடுகள் ஆடுகளை அடைத்தல் போன்று
மிஸ்கீன் ஏழைகளை அடைத்து வைத்து
நீட்டுவதால் சில்லறையை அவர்கள் வாழ்வு
நிம்மதி பெற்றிடுமா? கொடுமைதானே!

OOOO

ஏன் எங்கள் ஸக்காத்தைப் பரவலாக்கி
ஏழைகள் எல்லோர்க்கும் கிடைக்கச் செய்து
தீனுக்குத் தொண்டாற்றி கொடுத்திடுவோம்!
தீதான கொடுமைகளைத் தவிர்த்துக் கொள்வோம்!

OOOO

**நன்றி : தினகரன் -**
**12-06-1985**

## புரியாமை!

**தாகம் என்றவருக்கு**
**புசிக்கக் கொடுக்கின்ற**
**சமுதாயத்தையே**
**காண்கின்றேன்**
**புரியவில்லை!**

OOOO





# உனக்காக!

அன்புத் தங்கை உனககாக
அரபு நாட்டின் வாழ்கின்றேன்!

OOOO

கடைகள் தோறும் படியேறி
கிடைத்த முகவர் தனையெடுத்து
படைத்த எழுத்துப் பணியாலே
பண்பாய் உன்னைப் படிப்பித்தேன்!

OOOO

பத்தாம் வகுப்பை நீ தாண்ட
அன்புத் தாயும் உயிர் நீத்தாள்!
எத்தனையோ தொழில் செய்தும்
என்னால் தொடர முடியவில்லை!

OOOO

முட்டை விற்று நீ சேர்த்த
முழுப் பணமும் நான் கட்டி
கட்டித் தரகர் ஒருவருக்கு
கண்ணே இங்கு நான் வந்தேன்

OOOO

வீட்டுக் கூரை மாரியினால்
வீழ்ந்ததாலே படும் துன்பம்
காட்டி நீயோ மடல் வரைந்தாய்
கெதியில் பணமும் கேட்டிருந்தாய்

OOOO

எந்தன் பணத்தில் உன்படிப்பும்
ஏனைய குடும்பச் செலவுகளும்
தந்து கொள்ளப்படும் பாட்டை
தங்காய் வீட்டிற் சொல்லாதே!

OOOO

அடுத்த வீட்டில் வாழுவதாய்
அறிவித்திருந்தாய் என் செய்வேன்?
படிப்பை மட்டும் விட வேண்டாம்
படிப்புக்கென்றும் உதவிடுவேன்

OOOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புத் தங்கை உனக்காக
அரபு நாட்டில் வாழ்கின்றேன்

○○○○

நன்றி
தினகரன் - 1987 இக்கவிதை சவூதி ஜித்தாவிலிருந்து எழுதி அனுப்பப்பட்டது

# தொழிலுக்குப் ப(ய)ணம்!

பொன்னிம்மா ராத்தா
பெண் பிள்ளைப் பிரச்சினையால்
சின்ன வளவொன்றை
செட்டிக்கு விற்றுவிட்டு
கண்ணான புருஷன்
கலந்தர் மரைக்காரை
அந்நிய நாட்டுக்கு
அவசரமாய் அனுப்பிவிட்டாள்

○○○○

அந்நிய நாட்டில்
அவர் பெற்ற தொழில்வாய்ப்பு
கண்ணாடிக் கடையொன்றில்
கதிரைகள் துடைப்பதுதான்!
அண்ணன் கலந்தரின்
அத்தனை முடி நரைத்தும்
பெண்டாட்டி பிரிவினிலே
பெரிதும் வாடுகிறார்

○○○○

ஒன்றொன்றாய் வரும் மடலில்
உருக்குலைந்த கலந்தருமோ
கன்னியழியாது
கஷ்டத்தில் தொழிலுக்கு
முன்வீட்டுக் குசுனியிலே
முடங்கிக் கிடப்பவளை
கண்ணால் கதை பேசி
கருத்தில் கலந்து விட்டார்!

○○○○





பன்னாய்க் கிடப்பது
பாயாய்க் கிடக்கட்டும்
என்ற கதையினிலே
இனிமை காண்கின்றார்
பொன்னிம்மா பெண் பிள்ளைப்
பிரச்சினையால் தொல்லையுற
கன்னியும் இவர் பணத்தை
கச்சிதமாய் சுருட்டுகிறாள்!

○○○○

நன்றி :
13-09-1987 தினகரன் வாரமஞ்சரி - சவூதி ஜித்தாவிலிருந்து எழுதி அனுப்பப்பட்டது

# ஹஜ்!

ஹஜ்ஜுக்குப் போவோமா?
காதர் காக்கா!
பட்ஜட் உதைக்காது
பறந்து போவோமா?
ஹஜ்ஜுக்குப் போனால்....
ஹஜ் கிடைக்கும்!
காசும் கிடைக்கும்!
ஹஜ்ஜுக்குப் போவோமா?

○○○○

ஹயாத்துக்கும் பள்ளிக்குப் போயிடாத
ஹயாத்துக் காக்காவும் ஹஜ்ஜு சென்றார்
தியாகம்தான்! உண்மையிலே எண்ணிப்பார்க்க
தியாகமென்று எதைச் சொல்வோம்? புரியவில்லை!

○○○○

விலா எலும்பு இல்லையெனில் நம் உடம்பை
விழுங்கி விடும் வாய்விரித்த முதலைக் கூட்டம்
பலா-பலனாய் ஏஜன்ஸைத் திறந்து வைத்து
பறக்கின்றார் ஹஜ்ஜுக்குப் பலரைக் கூட்டி

○○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களது பணம் குடித்து மக்காவுக் கனுப்புவர்
பக்கீரின் தாச்சினிலே பலகாரம் சுட்டவர்கள்
"பொக்கேட்டில்" பணமடித்து கடல் நீரில் வேளாண்மை
புதினமாயப் பயிரிட்ட புத்திக்காரர்கள்

○○○○

ஐம்பது ஆயிரமாய் ஆட்களிடம் வசூலித்து
உம்மாவும் ஹஜ்ஜுக்கு ஓசியினிலே செல்கின்றா
வம்பர் வாப்பாவும் விமானத்தில் இடமிருக்க
வாறேன் நான் என்று வழிதேடிப் போகின்றார்

○○○○

இறைச்சும் பொரித்து மீனும் தீச்சி
இடையினிலே தின்பதற்கு பருப்பும் வறுத்து
இறைமைகொள் கஃபாவுக் கெடுத்துச் செல்வோர்
இந்நாட்டின் தியாகிகள் ஹஜ்ஜாஜிகள்

○○○○

ஆப்கான் முஜாஹித்கள் அழுகை கேட்கிறதா?
அகதிமுகாம்கள் அவலம் புரிகிறதா?
சாப்பிட்டேதான் சதிபதியாய் மக்காவில்
சவாரி செய்வோர் எதனைப் புரிவார்கள்?

○○○○

முட்டைக்குள் வழிதேடி மூலைக்குள் பதுங்குபவர்
முஜாஹிதீன் நிலைகாண முனைய மாட்டார்கள்
கட்டையிலே ஒட்டிய அட்டைபோல் ஹஜ் செய்து
பட்டத்தை தட்டுதற்கே பறந்து சென்றுள்ளார்

○○○○

ஹஜ்ஜுக்குப் போவோமா?
காதர் காக்கா
பட்ஜட் உதைக்குது
பறந்து போவோமா?
ஹஜ்ஜுக்குப் போனால்....
ஹஜ் கிடைக்கும்!
காசும் கிடைக்கும்!
ஹஜ்ஜுக்குப் போவோமா?

○○○○

**இக்கவிதை 1988ம் ஆண்டு பேருவலை ஜாமிஆ நழீமியாவில் நடைபெற்ற வெளியாருக்கான முதலாவது கவியரங்கில் பாடப்பட்ட கவிதையின் ஒரு பகுதி**



மௌலவி காத்தான்குடி. பௌஸ்

# பொலிவிழந்த மரகதங்கள்..!

வாழ்வைத் தேடி
வீட்டுக்குள் அடைபட்டு
காலத்தைத் தாண்டும்
கண்மணி என் மகளை
சிறப்பாக வைக்கவே
சிறகடித்துப் பறந்தேன்

○○○○

எந்தன் வேலைகள்
எனக்கே தெரிந்தது
வெடித்த எரிமலைக்குள்
வேதனையை அனுபவித்த
வேலைப் பெண் நான்!

○○○○

அறியாத பாஷையுடன்
புரியாத மனிதருடன்
மண்டையை உடைக்கும்
மரியாதைப் பெண் நான்
இரவு தூக்கத்தில்
மகளை நினைத்து
கண்ணீர் விடும்
பாவி!

○○○○

சமுதாயம் அமைத்த
சம்பிரதாயச் சடங்குகள்
ஒரு வாழ்கைக்கு
ஒரு லட்சம் வேண்டும்
மாடி வீட்டில்
மாடாய் உழைத்து
ஓடாய் ஒடிந்த
என் மேனி!

○○○○

அறியாத அயலவர்கள்
என்றன் பிள்ளை
எங்கோ தவறியதாய்
எரிச்சல் கொண்டு
எடுத்து விட்டகதைகள்
துடிக்கும் உள்ளத்தைத்
துளைக்கும் அம்புகள்

○○○○

புடைத்த என் மார்புகளை
புருஷன் கவர்ந்து
புன்னகைத்த நாட்கள்
போய் மறைந்தன

○○○○

அடுத்தவன் பார்ப்பதுவும்
அசிங்கம் என நினைக்கும்
முக்காடிட்ட
முந்தானைக்காரி - எனக்கு
முழு அசிங்கப் பட்டம்
தந்தது
முட்டாள் சமுதாயம்
இன்று நானும்
பிள்ளையும்
பொலிவிழந்த
மரகதங்கள்!

○○○○

நன்றி :
தினகரன்
இதய கோலங்கள்
11-02-1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாத்தான் சல்மான் ருஸ்தி..!

சல்மான் ருஸ்தி
சுலைமானாய் இருந்திருந்தால்
சுலைமா வெளியீட்டில் - இன்று
சூணாக இருந்திருக்கும் - இல்லை
சூடாக இருந்திருக்கும்!

○○○

சல்லிமான் சிலர் சொல்லி
செல்லாமான் - சல்மான்
அல் அமான் றஸூலுக்கு
சொல்லம்பு விடுத்தானாம்
விள்ளுவார் குமைனி
கொல்லுவார் அவனை
அள்ளுவார் நன்மை!
அதுதான் உண்மை!

○○○

குஸ்தி போட ருஸ்தி
குடித்தானோ விஸ்கி?

○○○

ஷைத்தான் எழுதிய
ஷைத்தானின் வசனங்கள் - குட்டி
ஷைத்தான்கள் சேர்ந்து
குதூகலிக்க வழியாச்சு
மெய்தான் அந்த
மிலேச்சை ஷைத்தானை
மேதினியில் குமைனி
கண்டு பிடித்தால்
ஐயின், கையின் போல்
கொளுக்கையிட்டு
ஆவி பிரியத் தூக்கிலிடுவாரே!

○○○

**இக்கவிதை 01-04-1989 சீனன்கோட்டை முஸ்லிம் மகளிர் வித்தியாலயத்தில் நடைபெற்ற சுலைமா ஏசமியின் "மனச்சுமைகள்" சிறுகதை தொகுதியின் அறிமுக விழாவுடன் கூடிய சல்மான் ருஸ்தியின் கண்டனக் கூட்டத்தில் வாசிக்கப்பட்ட நீண்ட கவிதையின் ஒரு பகுதி.**

பேராசிரியர் அல்லாமா ம.மு. உவைஸ் அவர்களின் பாராட்டைப் பெற்றது.





# மாலைப் பொழுதில் மார்க்கம் எங்கே?

**வி**ளையாட்டு விட்டு
**வி**ரைவாய்க் குளித்து
**ம**கனே கண்ணே ம.்.ரிப் தொழுது
**ம**றையை ஓது!
**ப**ழைய தாய்மாரின்
**ப**ணிப்புரை இ.்.து!
**நி**லையான இஸ்லாத்தில்
**நி**லைகொண்ட மனசு!

○○○

செய்தியின் பின் நாடகம்
சொல்வதைக் கேள்!
"பள்ளி போனால்....
பார்க்கக் கிடைக்காது,
இருந்து பார்த்து விட்டு
எங்கேனும் போ"
தொலைக்காட்சிக்குத் தூண்டும்
இன்றைய தாய்மாரின்
இனிய கட்டளை!
புண்ணாய் ஆகுது
போதனைகள் மண்ணாய்ப் போகுது
மக்கள் நிலை!

○○○

**மா**லையில் கஞ்சாக் கட்டு
**மு**டிந்ததும் குடு, சுருட்டு
**நா**ளுமே இளைஞர் வாயில்
**நா**றிடும் வடி கசிப்பு!

○○○

பழுத்த முடியாள் பாட்டி - பூட்டி
தொழுத பாயினில்
தொடர்ந்தே இருந்து தஸ்பீஹ் செய்து
அழுது சலித்தது
அந்தக் காலம்!

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழுத்ததும் பிஞ்சும் தொழும் இடத்தில்
தொடர்ந்திருந்து எழாமல் டீ.வி.
இருந்து பார்ப்பது இந்தக் காலம்!

○○○

ராத்திபும் திக்ரும்
அந்தக் காலம்!
ரிமோட் கொன்ட்ரோல் கையில்
இந்தக் காலம்!
தொழும் பாயடியில்
அந்தக் காலம்! டி.வி. யடியில்
இந்தக் காலம்!

○○○

முக்காடிட்டது
மூடிமறைந்தது!
டெக்முன் இருப்பது
லேட்டஸ் ஆனது!
முதியோர் தஸ்பீஹ்
மூலைக்கானது!
நதியாப் பாடல்
நாவுக்கு வந்தது!

○○○

பெத்தா தூங்க
மணி ஒன்றாகும்
பேத்தி படுக்க
மணி மூன்றாகும்
ஒரு ஷோவோடு
பெத்தாக் குறக்கம்
இரண்டாம் ஷோவில்
இதுகளுக் குறக்கம்
மார்க்கம் கொள்ளும்
மாலைப் பொழுது
மூர்க்கம் கொண்டது
முற்றிலும் கேடு!

○○○

**நன்றி : தினகரன் - ஆலவமுல் இஸ்லாம்**
**01-07-1988**



மௌலவி காத்தான்குடி பௌஸ்

# தலைப்புக்கள் மாறினால்...!

அரவந் தீண்டி இறந்தான்
என்றால்...
பரபரப்பாக இருக்கும்
பயத்தால்...
படிக்கும் பத்திரிகையின்
பக்கம் கூடத்துடிக்கும்
பாம்பு பாலனைக் கடித்தது
பழைய செய்தி
பத்திரிகைத் தலைப்பு!
பாம்பைக் கண்டால்
படையும் நடுங்கும்
பரம்பரைச் செய்தி!

○○○

பாம்பைப் பாலன்
கடித்தான்!
புதுமைச் செய்தி
உருசியான உணவுக்குப் பாம்பு!
உணர்ச்சியூட்டும் தலைப்பு!
சீனருக்கு இது சிறப்பு
பாம்பு பரீத் நஸீரின்
பழைய நண்பன்
வேதனையின் விஷமியல்ல
பாம்பு
சாதனையின் சக்கரவர்த்தி!

○○○

மலைக்கு ஏறாதே
மலைப்பாம்பிருக்கும்
பிழைக்கத் தெரியாதவர்களின்
பிதற்றல்
கொழுந்து பறிக்கத் தெரியாதார்
குமுறல்
மலைப் பாம்பை உயிருடன்
பிடித்தால்
விலைக்கு விற்கலாம்
மலையுலகின் கர்வங்கள்
படினக் கருத்துக்கள்

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகத்தில் பாம்பு கடிக்கும்
ஞானபிதாக்களின்
நல்லுபதேசம்!
நகரத்து நாகரீகப் பித்தர்களுக்கு
நகைப்பு!
நாஸ்தீக நடிப்பு
மனித மாற்றத்திற்குக்
காரணம்
தலைமாறும் தலைப்புக்கள்!

○○○

**நன்றி : தினகரன் - குறிஞ்சிக்குரல்**
**02-07-1988**

# ஹஜ் ஒரு வரலாறு!

இரவுகள் அடுக்க இபுறாஹீம் விழிக்க
இனியவர் ஹாஜரா மலர
பறவைகள் உறங்கப் - பகலவன் மறைய
பனிமலை மூட்டங்கள் நிறைய
உறவுகொள்ள இருவர் வாழ்வினில்
உன்னத மகனாய்ப் பிறந்த
சிறுவனே செல்வன் இஸ்மாயில் நபியை
சேர்ந்ததே ஹஜ்ஜின் கதைகள்!

○○○

மனிதத் தந்தை மாண்புறு ஆதம்
மக்காவில் நிறுவிய க∴பா!
தனித்து நின்றது தகைமை சேர்ந்தது
தனியிறை போதம் தந்தது
பனித்துளியாகப் பாரை நிறைத்த
பாரிய நூஹின் வெள்ளம்
புனித க∴பா தன்னைச் சிதைக்க
பின் நபி இபுறாஹீம் கட்டினார்

○○○

இல்லற வாழ்வில் சொல்லொணாத் துன்பம்
இபுறாஹீம் குடும்பம் எழுந்து
வல்ல இறைவன் பள்ளிக்காடு
வளமுறு க∴பா அருகே
செல்லக் கொழுந்து இஸ்மாயிலை





சீரிய ஹாஜரா முகந்து
கல்லில் கிடந்து கிள்ளை அழுது
கேட்டு நின்றது தண்ணீர்

○○○

தண்ணீர் தேடி ஸபா மலை சென்றார்
தாகத்திற்கேதங்கு தண்ணீர்?
உன்னி எழுந்து ஓடினார் மறுவா
உயர்ந்த மலையும் நாடி
அன்று தண்ணீர் தேடியே ஓடிய
அன்னை ஹாஜரா நினைவே
இன்று நாங்கள் ஸபா மறுவாவில்
ஓடும் ஸயீயின் வணக்கம்!

○○○

அன்னை சென்றார் தண்ணீர் தேடி
அங்கே தண்ணீர் இல்லை
தம்பி இஸ்மாயிலும் தரையில்
காலை அடித்து அழவே
ஸம்ஸம் என்ற தண்ணீர் ஊற்று
சடுதியாய் ஊறி வரவே
அன்னை ஹாஜரா அதனைப் பார்க்க
அதுவே ஸம்ஸம் ஊற்று

○○○

தனது மகனார் இஸ்மாயிலை
அறுத்துப் பலியிட நபிகள்
கனவு கண்டார் துணிந்து நின்றார்
கத்தியும் கயிறுடன் சென்றார்
கணத்தில் வந்து இபுலீஸ் குந்த
கல்லால் அடித்தார் ஜம்றாத்!

○○○

கல்லில் குந்தி கருத்தைக் கலைத்த
கொடியோன் இபுலீஸை நோக்கி
வல்லார் நபிகள் இபுறாஹீமும்
வாரிக் கல்லால் அடிக்க
பொல்லா ஷைத்தான் புறப்பட்டோட
புனித ஹஜ்ஜில் அங்கு
கல்லால் மலைக்குச் செல்வார் எறியும்
கடமை வரவுமாச்சு!

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுக்கே கிடத்தி அறுக்க மகனை
குப்புற இஸ்மாயில் படுக்க
அறுக்கக் கத்தி மறுத்த காலை
அடித்தார் அருகே குன்றுடைய
வெறுத்தான் அல்லாஹ் விரும்பி ஆட்டை
விஷேட பரிசாய் அனுப்ப
அறுத்தார் ஆட்டை குர்பான் செய்தார்!
அந்தோ தியாகம் காணீர்!

○○○

நன்றி : பாசமலர் 1988 ஆகஸ்ட்
ஹஜ் மலர்

# திருடர்கள்!

வீதி விளக்குகளை
விழிக்க விடாமல்
தூங்குவதற்குத்
தூபமிடுபவர்கள்
ஊர்காவல் படையுடனும்
ஒரே எதிர்ப்பு!

○○○

இரவுக் காவல் பிராணிகளுடன்
இரக்கமில்லாத
ஜீவன்கள்!
மா இலை ஆடுவதும்
மனதுக்குப் பயம்!

○○○

திறப்பு இல்லாமல்
பூட்டைத் திறக்கும்
திறமைசாலிகள்!
பாயும் பயிற்சி இல்லாமல்
மதில்களால் பாயும்
வீராங்கனைகள்!

○○○

அடிக்கொரு
பொய் நினைப்பவர்கள்
அடிப்பட்டால்
உண்மை
உரைப்பவர்கள்
செய்யும் தொழிலைச்
சிறப்பாகச்
செய்பவர்கள்
திருடர்கள்!

நன்றி : தினகரன் -
08-09-1988





# உனக்கும் ஓய்வுண்டு!

சந்திரனும் ஒருநாள் மறைந்து
சாய்ந்தே ஓய்வெடுக்கும்
பிந்திவரும் நாளினிலே - வானிலே
பிறந்து பிரகாச மளிக்கும்
முந்திவரும் சூரியனும் மணி ஆறில்
முகமூடும் பகலெல்லாம் இருளாகிடும்
கந்தல் விழும் காற்றெழுகும் கறுக்கமுகில்
கனகனத்து மழை பெய்திடும்
சொந்தழகுச் சுந்தரியாள் சுமக்கின்ற சிசுகூட
சுணங்கியும் பிறந்து விடும்
அந்தோ மலையகத்தில் சந்திராணி பிந்திவர
அனுமதிக்கா தோட்டத் தொழில்!

○○○

முலைக்காம்பில் காயமுறும் விலைமாதும் வீட்டினில்
முன்னூறு பணம் தேடுவாள்!
சளைக்காமல் தவில் தட்டி தோலினிலே தோல் காய்ந்தான்
சத்துணவு சாப்பிட்டிடுவான்!
நிலையாய்த் தொழுபவன் நெற்றியும் காய்ச்சிடும்
நியாயமாய் சுவனம் கிட்டும்!
மலைமுகட்டில் கூடையுடன் முதுகெல்லாம் காய்ந்தெனக்கு
மாறுதல் என்ன உண்டு?
அலைந்ததும் உழைத்ததும் யார் யாரின் உயர்வுக்கோ
ஐயையோ உடல் குன்றினோம்
நிலையான தொழில்வாய்ப்பு எப்போது கிட்டிடும்
நிம்மதி பிறக்கு மெப்போ?

○○○

நன்றி : தினகரன் - குறுஞ்சிகுரல்
10-09-1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லவனாய் வாழ்ந்திடு!

துள்ளி எழுந்திடு!
பள்ளிக்குச் சென்றிடு!
கல்வியைத் தினமும் கல்லு!
நல்லதைச் செய்திடு!
கல்விகாண் நூற்களை
அள்ளி மணந்து கொள்ளு!
பொல்லாத செயல்கள்
எல்லாமே மறந்திடு
கள்ளங்கள் நீக்கித்தள்ளு!

○○○

உள்ளதைப் பேசிடு!
அல்லதை நீக்கிடு!
சொல்லினில் உண்மை
கொள்ளு!
தொல்லை களைந்திடு
வெள்மனம் கொண்டிரு
நல்லோனாய் வாழ்ந்துகொள்ளு!
கல்விமான் எவருக்கும்
முள்ளாயமையாது
பிள்ளை போல் வாழ்ந்து நில்லு!

○○○

நன்றி : தினகரன் - கல்வி அரங்கு 17-08-1988

# நானோர் நடைப்பிணம்!

உணர்வுகளை மனப்பூர்வமாக
தினமும் அனுபவிக்க
இணக்கமான
எனது உடல் வாக்கு

○○○

கனவுகளின் நினைவுகளாய்
பணத்துக்காக சனத்தெரிவு
கல்யாணம் - குணம் கெட்ட
வாலிபன் தினமும் குடி!
மணமுடிக்க இணங்கினேன்

○○○

தியானக் கிடக்கை
தினமும் படுக்கிறேன்
வாழ்க்கைத் துணைவனின்
வாய் நாற்றம்!
வாழ்வை பயமுறுத்தும்!

○○○

வியாபாரச் சந்தையிலே
விற்கும் விலைமாதாய்
மயானத்தைக் கிளறும்
பசுமாடு போல
பயங்கரமாய் நடக்கும்

பாலியல் கலை
வியந்து வாயடைக்கும்
விஷமிக்க
காமக் கீறல்கள்!
வேதனையை
விலைகொடுத்து
வேண்டிய வேதனை!
விவாகரத்துக்கும் விடாத
விளங்கிக்கொள்ளாத
பெற்றாரின்
வில்லங்கங்கள்!

○○○

நானோர் நடைப்பிணம்
கூண்டுக்குள்
அடைபட்ட
குடித்தன மாது!
வேண்டு மென்று
புருஷனால்
வேதனையை
அனுபவிக்கும்
விவாக மாது!

○○○

நன்றி : தினகரன் -
இதய கோலங்கள் 25-08-1988





# காலமும் காக்கும் கல்வி!

வெள்ளையுடையினிலே வீற்றிருக்கின்ற
வெள்மனப் பிள்ளைகளே!
பள்ளி செல்லும் பால்மனச் செல்வங்களே!
தொல்லை யுலகின் துயரம் களைந்து!
துணிந்து பயிலுங்களேன்
கல்வியைக் கற்று நல்லவராகிக்
காலமும் நில்லுங்களேன்
செல்வங்காள்! சீருடன் சீவியுங்கள்!
சிறப்புற்றுத் திகழ்ந்திடுங்கள்!

○○○

வீதியில் ஆயிரம் வேதனை திகழ்ந்திடும்
விழிகளை மூடிக்கொள்வோம்!
நீதியாய்ப் படித்து நாளைய உலகில் நல்
நிகழ்வுகள் காட்டிடுவோம்
போதிக்கும் ஆசானை பெற்றாரை உற்றாரை
போற்றி நடாத்திடுவோம்!
வாதித்து வீணாக வாயளப்போர் முன்னே
வாயினை மூடிக்கொள்வோம்!
பாதியில் கல்வியை விட்டு விடாமலே
படிப்பினைத் தொடர்ந்திடுவோம்!

○○○

நன்றி : தினகரன் - கல்வி அரங்கு - 21-09-1988

# ஒற்றுமை?

ஒற்றுமை எனும்
கயிற்றைப் பற்றிப் பிடியுங்கள்
என்ற - அல்குர்ஆன் வசனத்தை
வாயால் மட்டும் எல்லா
இஸ்லாமிய இயக்கங்களும்
பற்றிப் பிடித்துள்ளன!

○○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரித்திரம் படைக்கிறோம்!

பஞ்சணை மெத்தையே
தஞ்சமென
நீட்டி நிமிர்ந்து
நிம்மதியாய் படுத்துறங்கும்
குவைத் நாட்டின்
கோடீஸ்வரர்
எழுந்திருந்து
இடுப்பை நிமிர்த்தி
தாகம் தீர
பெரிய போச்சில்
சுவையாகப் பருகின்றார்
சிலோன் தேயிலையில்
சூடான தேநீரை

○○○

இந்தத் தேயிலையை
இனிய ரகத்திற்கு
சந்தைப்படுத்த
சிரமம் சிறிதளவா?
இரவைப் பகலாக்கி
கூதல் தன்னைக் குடைந்து
மலை மேடுகளில்
அலைந்து இலைபறித்து
உடம்பை உழைப்புக்கு
ஏற்ற பம்பரமாய்
ஆட விடுகின்றோம்
தேடிக் கொடுக்கின்றோம்

○○○

எங்கோ இருப்பவர்கள்
இதமாய்ப் படுக்கையிலே
எங்கள் கரங்களினால்
எடுத்த தேயிலையை
சாய்ந்து கட்டிலிலே
சுவைத்து மகிழ்கின்றார்!
ஐயோ! ஆண்டவனே
அந்தத் தேநீரை
ஆறி அமர்ந்து
அருந்த வாய்ப்பின்றி
சக்கரமாயச் சுழன்று
சரித்திரம் படைக்கின்றோம்!

○○○

நன்றி : தினகரன் - குறிஞ்சிகுரல் 1988

## விபரீதம்!

மண்ணுக்குள்
வேர் இருப்பின்
மரம் - பூக்கிறது
காய்க்கிறது!
வேர் வெளிவந்தால்
மரம் - விறகுபோல்
காய்கிறது
பெண்ணுக்கு அடக்கம்

○○○○

பக்குவத்தை வளர்க்கிறது
பேரத்தில் வெளிவந்தால்
பெண் வாழ்க்கை
விபரீதமாகிறது

○○○○

நன்றி : தினபதி வாரஇதழ் சிந்தாமணி
- 05-09-1978

இக்கவிதை 8 மாதங்களின் பின்
பிரசுரமானது



மௌலவி காத்தான்குடி பௌஸ்

# திருந்தும் நிலை வேண்டும்!

மூக்கிருக்கும் வரையினிலே சளியிருக்கும்
முகில் கறுக்கும் அளவுக்கு மழையிருக்கும்
போக்கிலே மனிதனுக்குப் பிழையிருக்கும்
போதனையால் அவன் மாற வழிபிறக்கும்
நாக்கினது தடுமாற்றம் உயிரைப் போக்கும்
நாவளந்து பேசுவதால் வாழவைக்கும்
ஊக்கமுடன் பயிலுவதை செயல்படுத்தும்
உண்மையுள்ள மாணவனாய் உன்னை மாற்றும்!

○○○

தூக்கேறும் நிலைவரும் துணிவு தோன்றும்
துரயத்தைத் தாங்கிடப் பழக வேண்டும்!
தீக்குளித்துத் தியாகமுற எண்ணம் தோன்றும்
தீதென அதை நினைத்து திருந்த வேண்டும்!
தாக்குகிற நோக்கங்கள் தலையெடுக்கும்
தரமில்லை என ஒதுக்கிப் பழக வேண்டும்
ஆக்கமுறு பணிசெய்ய மனசு சொல்லும்
ஆராய்ந்து ஆவலுடன் அணுக வேண்டும்!

○○○

ஆசானை அடித்துவிட யார் சொன்னாலும்
ஆகாது என அங்கு குனிய வேண்டும்!
நேசமுடன் அவர் தந்த அறிவையெல்லாம்
நினைவலையில் ஒவ்வொன்றாய் வகுத்துப் பாரும்!
கூசாமல் நீ படிக்கும் பள்ளிக்காக
கோடானு கோடி பணி செய்யவேண்டும்
வாசனை மரத்தடியில் வளர்ந்த கன்றாய்
வாலிபத்தைப் பள்ளியிலே ஆக்கிக்கொள்ளு!

○○○

நன்றி : தினகரன் -
கல்வி அரங்கு
12-12-1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிளக்கு!

பன்னரிதாங் கண்ணிருந்தும் பாரைநோக்கும்
பக்குவத்தை யறியாத மூடமக்கள்
உண்பதினை உடுப்பதினை உணரா மக்கள்
உறைவிடத்தை ஒழுங்காகப் பேணா மக்கள்
கண்டதினைக் கடவுளெனக் கணித்த அந்தக்
கருணையில்லாக் காமவெறி பிடித்த மக்கள்
முன்னிலையில் முழுமதியை நிகர்த்த முஹம்மத்
மோகனமார் நெறிதாங்கித் தோன்றலானார்

ooo

தன்னுடலை வளர்த்துவிடும் நோக்கத்தாலே
தரமில்லாக் குடிவகைகள் பருகி நின்று
பொன்னிகர்த்தப் பெண்மக்கள் பிறந்த போது
புதைகுழியுட் தள்ளிவிட்டுப் புதைத்து நின்ற
வன்செயல்கள் வாழ்வினிலே கொண்ட அந்த
வழிகெட்ட துரோகிகளின் சமூகத்திற்றான்
அன்பொளிரும் நெறிதாங்கி அண்ணலெங்கள்
அஹ்மதவர் அகிலமதில் தோன்றலானார்

ooo

பொன்பலவும் தருகின்றோம் பொருமானாரே!
போதனைகள் விட்டு விடும் என்ற போது
அண்ணலவர் அதைச் சிறுதும் ஒப்பவில்லை!
அடித்தார்கள் அன்றையோர் கல்லால் பொல்லால்
என்றாலும் எங்கோமான் இலட்சியத்தை
இழந்து விடத் துணிந்தார்கள் இல்லை! ஆமாம்!
குன்றெனவே நிலைபெயரா நின்ற கோமான்
குபிரோட்டும் கதிரோனாய்த் தோன்றலானார்!

ooo

நன்னகராம் தாயிபுக்குச் செல்ல அந்த
நகரத்தார் பாதத்தில் எறிந்த போது
புண்ணாகிப் போயிற்றே புனிதப் பாதம்
பொற்குணத்துப் பொக்கிஷமாய் வந்த கோமான்
கண்ணியத்தின் துணைகொண்டு கனிவைக் காட்டி
கடுந்துன்பஞ் செய்திட்ட மாந்தரைத்தான்
மன்னித்து நின்றிட்ட மனிதப் புனிதர்!
மாணிலத்தின் மணிவிளக்காய்த் தோன்றலானார்!

ooo

நன்றி : தினகரன் - மீலாத் கவியரங்கம் 24-10-1998



மௌலவீ காத்தான்குடி பௌஸ்

# தோட்டத்தார் துயரங்கள்!

கூடை சுமந்தே குடித்தனம் அமைத்தோம்!
காடு வெட்டிக் காலத்தை கழித்தோம்!
நாடே நமதென நாளும் உழைத்தோம்!
பாடுபட்டே பசிப்பிணி துடைத்தோம்!
பேடு படுக்க சேவல் கூவும்
வீடு விட்டே வேலைக் கெழுவோம்!
மாடாயுழைத்து ஓடாய்த் தேய்ந்தோம்!
தேடிய பணம்தான் திண்ணையில்லை!

ooo

வாட்டும் நோயால் வள்ளியம்மை
வாட்டில் படுத்தாள் வலிதான் உண்மை
தோட்டத்தில் பட்ட துன்பங்கள் யாவும்
கேட்டறிந்தால் மனம்தான் வலிக்கும்
பாட்டும் இசையும் மீட்டும் சுதேசன்
நோட்டில்லாமல் நோட்டம் செய்தான்
ஆட்டும் வறுமை நாட்டில் ஓட
ஓட்டு எடுத்தோர் உழைக்க வேண்டும்!

ooo

மாட்டிய களிசனை மாற்றிக்கொள்ள
வீட்டில் வசதியே யில்லாத் தொல்லை!
போட்ட உடையில் புளுதியோடு
ஓட்டம் பிடிப்பான் உதயகுமாரு
கோட்டும் சூட்டும் மாட்டியோரெல்லாம்
தோட்டத்து மக்களை வாட்டும் பிணியை
கேட்டறிந்து கூட்டம் கூடின்
போட்ட ஓட்டில் பயன்தான் பாரேன்!

ooo

நன்றி : தினகரன் -
குறுஞ்சிக்குரல்
1988



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்தெழுவாய் பரீட்சைக்கு!

பள்ளி கொள்ளாத நாட்களின் பாடம்
படித்தெழுவாய் பரீட்சைக்கு நாளும்
உள்ள மகிழ்வோடு ஓய்வெல்லாம் படித்து
உன் எதிர்கால வாழ்வுக்கு துடித்து

○○○

சொல்லில் அடங்காத் திறமையைப் பூண்டு
சுயமுயற்சியாய் முன்னேறப் பாரு
கல்வி - ஆசானால் கிடைப்பது பாதி!
கருணை நேசனால் கிடைப்பது மீதி!

○○○

நல்ல அனுபவக் கல்வியும் பாதி
நாளும் நீ படிப்பது பாதி
உன்னைத் தூண்டிட யார் வரவேண்டும்?
ஒரு பொம்மைதான் வயின்பெற வேண்டும்

○○○

கண் இருப்பது கண்டாக உனக்கு
கடும் முயற்சியாய்க் கல்வியில் மூழ்கு!
எண்ணமே வாழ்வினில் மூச்சு!
இனி - இனியதை எண்ணி நீ பேசு!

○○○

நன்றி : தினகரன் - கல்வி அரங்கு 1990

## நிம்மதி?

ஆண்டவன் நிம்மதியைத்
தந்தாலும்
அமெரிக்காவும்
தரவேண்டுமே!

○○○○



மௌலவி காத்தான்குடி பௌஸ்

# சுவனத்து ஷுஹதாக்கள்!

ஷுஹதாக்கள் நாங்கள்
சுவர்க்கத்திலிருந்து
சுருக்கமாய் கூறுகின்றோம்
எங்களின் - இனிய
இரத்த பாசங்களே!
உங்களை விட்டுப்
பிரியும் போது இஷா என்ற
இரவுத் தொழுகையை
ஞாபகப்படுத்தி
வீட்டை விட்டு
வெளியே வந்தோம்

○○○

சின்னஞ்சிறுசுகள்
குர்ஆன் ஓதுகின்ற
குரலோசை கேட்க
அந்த வீதியால்
நடந்து வந்தோம்

○○○

சோறு திண்டிட்டு
படுங்க மகளென்று
சுலைஹா ராத்தா
சொல்லித் தீர்க்கையில்
அந்த வீதியால்
அவசரமாய் வருகின்றோம்

○○○

வழமையை விட
வரிசையில் ஆட்கள்
ஸப்பு நிறைய
சரளமாய் இருந்தார்

○○○

வழக்கமாய்ச் சொல்லும்
கதுகாமதுஸ் ஸலாத்
முஅத்தின் வாயால்
முழங்கித் தீர்த்தது

○○○

தொழுகைக்கு எழுங்கள்
என்ற
தொனிதான் அது
வீட்டுக் கெவரும் - கண்
விழித்துப் போகொண்ணா!
நீட்டுக்குப் போவோம்
நெடுகும் சுவனம்தான்
வேட்டுத்தான் நமக்கு
விபரம் தெரிந்து கொண்டா
கதுகாமதுஸ் ஸலாத்
காரமாயச் சொன்னார்?

○○○

டுமீர்! டுமீர்!! டுமீர்!!!
பள்ளி வெடித்தது
நிலத்தில் உருண்டோம்!
நினைவில் கிடந்தோம்!
கலிமாச் சப்தம்
காதை இடித்தது!
எல்லோர் வாயும்
இதனை மொழிந்தது!
என்ன நடந்ததென
எமக்கே தெரியவில்லை!
இரத்த மென்றால்
எங்கும் கிடந்தது!
இரண்டாம் முறையும்
டுமீர்! டுமீர்!!
பள்ளி மிம்பர்
பயணம் சொன்னது
கண்ணைப் பொத்தி
கையைக் கட்டினோம்
எங்கள் உணர்வுகள்
இனிதே முடிந்தது

○○○

எங்களின் இரத்த
பாசங்களே
உங்களை நாங்கள்
விரைவில் சந்திப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபுறுகளில் அல்ல
கண் அயர்ந்த கனவுகளில்
எங்கள் நிலைகளினை
இனிதே காணலாம்!

○○○

ஆத்ம உலகத்தில்
இஷாவுக்கு வந்த
இருபள்ளி ஜமாஅத்தையும்
இனிதே சந்திப்போம்
எல்லோரும் நமதூர்தான்
இருவர் ஏறாவூர்
முன்சென்ற மக்களையும்
மிக விரைவில் சந்திப்போம்

○○○

இப்போது நாங்கள்
எங்கிருந்து
கதைக்கின்றோம்
புரிகிறதா?

சுவனம் என்கின்ற - ஓர்
நிம்மதியின் இடத்திற்றான்
சுகமாய் கூடியிருந்து
பேசித் தீர்க்கின்றோம்!

○○○

எல்லோரும் இங்கே
இணைந்து இருக்கின்றோம்
ஊர்த் தலைவர் உள்ளார்கள்
உணர்ச்சியுள்ள ஆசிரியர்
மௌலவியுள்ளார்கள்
மாணவர்கள்
உள்ளார்கள்
எல்லோரும்
இருக்கின்றார்
இமாம் செய்த
மௌலவிதான்
எங்களுடன் வரவில்லை

○○○

**இக்கவிதை ஷுஹதாக்களின் 100வது நாள் நினைவாக காத்தான்குடி மீரா பாலிகா வித்தியாலயத்தில் நடைபெற்ற கவியரங்கில் பாடிய கவிதையில் ஒரு பகுதி (புலிகளால் காத்தான்குடி பள்ளியில் கொல்லப்பட்டவர்களே புனித ஷுஹதாக்கள்)**
**1990**

# காந்தியின் இருப்புக்கு கண்ணீர் விடும் மலர்த்தட்டு!

எங்கள் நாட்டின்
ஏற்றமிகு தலைவரே!
உங்களை வரவேற்று
வாழ்த்து
வழங்கும் போதெல்லாம்
வந்து பார்ப்பவர்கள்
நாங்கள் தான்!
நாங்கள்
நறுமணங் கமழும்
மலர்கள்
அதனாற்றான்
மாலைகளாக
மலர் கொத்துகளாக

உங்கள் கரங்களிலும்
காலா காலம்
காட்சி தந்தோம்

○○○

ராஜீவ் காந்தியெனும்
இனிய தலைவனே
ஜவஹார்லால் நேருவும்
இந்திரா காந்தியும்
இந்திய மண்ணின்
இனிய சொத்துக்கள்

○○○






முறையில் உங்களுக்கு
மம்மி! டடி!!
அவர்கள் அஸ்தமித்ததற்கும்
அற்புத வரலாறே உண்டு!

○○○

காவலின் கரங்கள் ஆடியே
கணப்பொழுதில்
உங்கள் அம்மா
உலகத்தாருக்கு
வணக்கம் சொன்னார்கள்
பாரதத்தின் கண்கள்
கலங்க
சமாதியுற்றார்கள்!

○○○

அம்மாவின் சாவுக்கு
நீங்கள்
தீ மூட்ட வரும் போது
ஓரத்தில் இருந்து
ஒன்றும் அறியாது
கண்ணீர் சிந்திய
பூக்கள் நாங்கள்தான்!
அம்மாவின் பின்னே
ஆட்சிக்கு வந்த
ராஜீவே
உங்கள் ஆட்சியில்
ஏற்பட்ட மலர்ச்சியில்
எங்கள் மனசு
மிகவும் மகிழ்ச்சி!
அதனாற்றான்
இவ்வளவு கொழுத்து
நிறம் விட்டு
இருக்கின்றோம்
இப்போதும் கூட
இந்தியத் தேர்தலில்
வெற்றி பெறுவீர்கள்
வரலாறு அமைப்பார்கள்
என்ற நோக்கில்தான்

இனியதாய் வாழ்த்திட
நாங்கள் வந்தோம்

○○○

இடைவழியில்
எங்களுடன்
பழக்கமே யில்லாத
பசளையொன்று
பக்கத்தில் இருந்தது
அம்மா இந்திராவின்
உடலில் வந்த
துப்பாக்கி மருந்தின்
துர்வாடை
இந்தப் பசளையிலும்
வீசுகின்றது
இதனால் - இது
ஆபத்தான கேஸ்!

○○○

ராஜீவ் அவர்களே!
வாழ்த்துச் சொல்ல
நாங்கள் வந்தாலும்
எங்களைக் கை கெடாதீர்கள்!
தலைவரே!
மேடைக்கு வந்து வீட்டீர்கள்
வாங்க வேண்டாம்!
வாங்க வேண்டாம்!
மலர்கள் பேசுகின்றோம்
உங்கள் உயிர்
உள்ளே இருக்கும்
பம்மில் இருக்கிறது
வேண்ட வேண்டாம்
விடைபெறுகின்றோம்!
ஐயோ.....
அந்த ராஜீவும்
சந்திரனாய் இலங்கி
அஸ்தமனமானார்கள்.

**நன்றி : தினகரன்**
**10-06-1991**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபஹின் அதான்!

குமரி இருட்டுக்குள்
குப்பி லாம்புடனே
அமல் செய்ய அதிகாலை
எழுந்து தொழுதவர்கள்
நமது சமூகத்தின்
நாம் கண்ட முன்னோர்கள்
எமது பள்ளிகளில்
இன்றும் வழக்கம் போல்
சுபஹின் அதான்
சொல்லப்படுகின்றது - அந்த
அதிகாலை அதான்
அனாதரவாய் ஒலிக்கிறது!

○○○

தூக்கத்தை விட
தொழுகை சிறப்பென்ற
தாக்கும் மந்திரத்தால்
தாக்குண்ட நம் சமூகம்
தூக்கத்தைக் களைந்து
துரிதமாய் பள்ளி சென்ற
போக்கு மாறியது!
புதுமை தோன்றியது!
காக்கும் படைகளின்
கடும் சட்டத்துக்குள்ளே
சுபஹின் அதான்
சொல்லப்படுகின்றது- அந்த
அதிகாலை அதான்
அனாதரவாய் ஒலிக்கிறது!

○○○

தூங்கித் தூங்கி
துன்யா வாழ்வினையே
தீங்கின் பிறப்பிடமாய்
தேடிக் கொண்டார்கள்
தூங்கு மூஞ்சுகளை
துடைத்துக் கொள்ளுங்கள்
பாங்கின் சப்தத்தில்
பக்தி கொள்ளுங்கள்!
ஆங்காங்கே தொழுது
அல்லாஹ்வை
வணங்குங்கள்!
சுபஹின் அதான்
சொல்லப்படுகின்றது
அஸ்ஸலாத்து
ஹைருன்
மினன்னவ்ம்

○○○

நன்றி : தினகரன் 1991

இந்தியப் படை இலங்கையில் அமைதி காக்கும் போது எழுதப்பட்ட கவிதை

## சமாதானம்!

பேச்சு வார்த்தைக்கு
போகாதவர்களிடம்
மாத்திரம்
நிரம்பிக் காணப்படுவது
சமாதானம்!

○○○○



மௌலவி காத்தான்குடி பௌஸ்

# பகிஷ்கரிப்பு!

வானத்துக்குக்கூட
டியுஷன்
வகுப்புக்கள்

○○○

வானசாஸ்திர
வகுப்பைக்
"கட்" பண்ணி
அரசியல்
வகுப்புக்கே
வானம் அதிக கவனம்

○○○

அரசியல்
படித்ததனால்
கௌரவம்
மானம்
மரியாதை
எல்லாம்
படித்துக்கொண்டது

○○○

அரசியல்
வாதிகளுக்கு
பூமாலை
என்றால்
பிடிக்கும்
பா-மாலை
என்றால்
இனிக்கும்
கறுப்பு
கொடி என்றால்
கண்கள் கலங்கும்.

○○○

வானத்துக்கு பூமி
பிரஜை! வானத்துக்கு
முகில்கள் சொந்தம்!
மழை சொந்தத்திலும்
சொந்தம்!

○○○

மழை கண்டவுடன்
பூமியில்
கறுப்பு நிறக்
குடைகள்!
வானம்
அரசியல் படித்தனால்
குடையெல்லாம்
குழப்புகின்ற
கறுப்புக்
கொடியாக
எண்ணி விட்டது
அதனால்தான்
மழையைக் கூட
வானம்
பகிஷ்கரித்து விட்டது!

○○○

நன்றி : தினகரன் வார மஞ்சரி
கவிதா சாகரம்
15-09-1996



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றஸூலுல்லாஹ்வின் மனித நேயம்!

விடிந்த பொழுது முடியும் போது
விளக்கை ஏற்றிடுவார்
படியில் கிடந்து குடியைப் பருகி
பண்பை மறந்திடுவார்
கடிதில் அதனை நபிகள் மாற்றி
கருத்தைப் பதித்ததனால்
விடிந்த பொழுதில் மனிதம் கண்டோம்
வேந்தர் றஸூலாலே!

○○○

பிள்ளை பிறக்கும் வீட்டின் முன்னே
பெரிதோர் குழியிருக்கும்!
பிள்ளை பிறந்து பெண்ணாயிருந்தால்
புதை குழியிட் போகும்!
அள்ளி மண்ணை மூடும் அந்த
அரபு அரக்கர் முன்
வெல்லும் கருத்தால் மனிதம் தந்த
வேந்தர் றஸூல் நபியே!

○○○

மக்கா ஹரமின் மினாரா வெளிச்சம்
மாலையாவதற்கா?
மக்கா சூழ்ந்த இருளை நபிகள்
மாற்றிய ஒளிவிளக்கா?
மக்கா நகரில் மனிதர் இருந்தார்
மனிதம் இருக்கவில்லை
மக்கத்தாரை மனிதராக்கிய
மாநபி றஸூல் மணியே!

○○○

பதுறு யுத்தம் முடியும் போது
பகைவர் கைதானார்!
பொதுவாய் அவரை மன்னித் தருளி
புதுமைத் தீர்ப்பளித்தார்!
கொதித்த நீரோ நெருப்புக் கண்டு
கொதிக்கும் நிலை போன்ற





விதியை மாற்றி குளிர்ந்த குணத்தால்
விடுதலை செய்தார்கள்!

○○○

அரைக்க அரைக்க சந்தணத்தூள்
அதிக மணமாகும்!
உரைக்க உரைக்க நபிகள் வாழ்வு
உயர்ந்த பயனாகும்!
தரையில் நபிகள் மனிதத் தன்மை
தகுந்த நடப்பாகும்!
நிறையப் படித்தால் நபிகள் வாழ்வு
நிலையே சிறப்பாகும்!

○○○

அல்ஹம்து ஓதுபவன் நுழைகின்ற மறுசூறா
அல்பகரா மாடு எனும் ரிஷபம்!
பல் ஹைறவான் போக்கினிலே குர்ஆனுள்ளே
படிப்படியாய் படிக்கின்ற ஒருவன் மனசு
குல்அஊது பிரப்பின்னாஸ் ஓதும் போது
குணத்தினிலும் "நாஸ்" என்ற மனிதனாவான்
அல்பகரா புகுந்தவனை அன்னாஸாக
ஆக்கியது குர்ஆன் நபிகள் போதம்

○○○

சுறாக்கா துரத்தச் சொன்னார் நபிகள்
சுரி வாங்கேன் மண்ணே!
சுறாக்கா மண்ணில் புதையுன்டேதான்
கெஞ்ச நபிகளிடம்
சுறாக்காவையும் மன்னித்தார்கள்
சுந்தர றஸூலுல்லாஹ்
பாருக்கிந்த மனிதம் தந்த
பெருமை றஸூலுக்கே!

○○○

மனித நேயம் உலகில் துலங்க
புனித உதாரணம் தான்
இனிய நபிகள் ஹுதைபியாவில்
எடுத்த உடன்படிக்கை!
துணிந்து எதிர்ந்தோர் சொல்லைக் கேட்டு
விட்டுக் கொடுத்து நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நேயம் நிரம்பச் செய்த
மாநபி றஸூலுல்லாஹ்

○○○

அண்ணல் நபிகள் பிறந்த இந்த
அணிசேர் மீலாதில்
எண்ணி வாழ்வோம் உஸ்வதுன் ஹஸனா
என்னும் நமூனாவை
கண்ணாய் வாழ்வில் மனித நேயம்
கொண்டு வாழ்ந்திடுவோம்
என்று கவியில் இனிதாய்ச் சொல்லி
இடத்தை அடைக்கின்றோம்

**இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை**
**மீலாத் கவியரங்கில் 1994ம் ஆண்டு படித்து ஒலிபரப்பான கவிதை**
**நன்றி : முஸ்லிம் சேவை**

# முஅத்தினுக்கான முடிவு!

அவரை விடுங்கள் - அவர்
அப்படியே சொல்லட்டும்!
ஐவேளை தொழுகைக்கு
அதான் சொல்லி
அழைக்கின்றார்
ஐந்து பிள்ளைகளுக்கு
அவர் தகப்பன்!
இரண்டாயிரம் தான்
இவரது மாத ஊதியம்
சம்பளத்தை விசாரித்தால்
அவருக்கு
சந்தோஷம் கொடுக்க வேண்டும்
சந்தித்து கொடுப்பது யார்?
அதனால்....
அவரை விடுங்கள் - அவர்
அப்படியே சொல்லட்டும்

○○○



வீட்டுக் கூரைக்கோ
விளக் கெரிப்பதற்கோ
வாட்டும் வறுமைக்கோ
வழிகள் கிடையாது!
கேட்டு விசாரித்தால்
கொடுக்க வேண்டி வரும்
கொடுப்பவர் எத்தனை பேர்?
அதனால்......
அவரை விடுங்கள் - அவர்
அப்படியே சொல்லட்டும்

○○○

இங்கு விமோசனம்
இருக்கும் இலாதிருக்கும்
பொங்கும் வியர்வையின்
புகலிடம் தேடி நிற்கும்
மங்கா மறுமையில்
முஅத்தின் கழுத்துயர்ந்து
சங்கையாளருடன்
சமூகம் கொடுக்கையில்
இங்கு தங்கியதை
அங்கு கேளுங்கள்!
உங்களுக்குப் பதில்
பொறுதியும் அதானும் தான்
என்று சொல்வார்
இருந்து பாருங்கள்
அதனால் ....
அவரை விடுங்கள் - அவர்
அப்படியே சொல்லட்டும்

**நன்றி : தினகரன் -**
**இஸ்லாமியச் சுடர்**
**16-10-1998**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பள்ளி இன்ரவியு!

ஆலிமுக்குப் பள்ளியில்
அவசரமாய் இன்ரவியு
முன்னால் டிரஸ்டிமார்
பையினுள்ளே ஹஸ்ரத்தின்
தஸ்தாவேஜுகள்
மௌலவிப் பட்டம்!
அல்-ஆலிம் பட்டம்!
தப்ஸீர் - ஹதீஸ்
பிக்ஹு - பாஷை - லுகத்
அரபுச் சான்றிதழ்கள்!

OOO

டிரஸ்டி சொல்கின்றார்
பைல் ஒன்றும் தேவையில்லை

OOO

மார்க்கம் தெரிந்தால்தானே?

OOO

ஐங்காலம் தொழுவித்தல்
மத்ரஸா நடாத்தல் - பாங்கு
பள்ளித் துப்புரவு
இவ்வளவுதான் வேலை!
இரு நேரச் சாப்பாடு
இரண்டாயிரம் சம்பளம்
சரிதானே ஹஸ்ரத்

OOO

ஆம் ஆலிமுக்கு ஜொப்!

OOO

நன்றி : நவமணி -
18-10-1998



மௌலவி காத்தான்குடி பௌஸ்

# ஹஸ்ரத்தின் கவலை!

பத்து வருடம் பணி செய்த
பள்ளி ஹஸ்ரத்!
பாரிய உலமா!

OOO

ஜும்ஆ ஓதினார்
தொழுகை நடாத்தினார்
ஓதல் பள்ளியை
உருப்படியாக்கினார்
ஊர் வேலையை
ஒவ்வொன்றாய்ச் செய்தார்

OOO

பிறந்த பிள்ளைக்கு
பெயரும் வைத்தார்
இறந்த மனிதனை
இனிதே அடக்கினார்

OOO

சம்பளம் சற்று
கூட்டிக் கேட்டார்
"உம்மாட்ட போங்கோ"
உரைத்தார் டிரஸ்டி

OOO

அடுத்து அனைவர்க்கும்
ஸலாத்தைச் சொன்னார்
எடுத்தார் பெட்டியை
தொடுத்தார் பயணம்!

OOO

நன்றி : நவமணி - 15-11-1998

# அண்ணல் நபியே!

அண்ணலெம் பெருமான் இந்த
அவனியில் தோன்றா விட்டால்...
உண்மையில் அமைதி ஏது?
உயிர்களுக் கபயம் ஏது?

OOO

கண்மணி ரஸுலுல்லாஹ்வை
காசினி காணா விட்டால்
புன்மைகள் நிறைந்திருக்கும்
போதனை எங்கிருக்கும்?

OOO

தண்ணீரில்லாப் பாலைவனத்தில்
தாஹா நபி துஆவால்
மண்ணிலே தண்ணிர் ஊறி
மகிழ்ச்சியாய்க் குடித்தார் தோழர்!

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்பிள்ளை என்ற போது
பேயாகிக் குழியுள் தள்ளும்
கண்மூடிச் செயல்கள் எல்லாம்
மண்மூட நபி உழைத்தார்!

ooo

பள்ளிகள் தொழுவதற்கும்
பயிற்சிகள் ஊட்டுதற்கும்
உள்ளத்தை வெல்லுதற்கும்
வள்ளலார் வழி வகுத்தார்!

ooo

பெருமைகள் இல்லா நபியை
பேதமை இல்லா நபியை
அருமையாய் நினைத்து ஸலவாத்
ஆயிரம் சொல்லி நிற்போம்!

ooo

நன்றி : தினகரன் - இஸ்லாமிய சுடர் 18-06-1999

## ஆலிமின் மறுபள்ளி!

ஊருக்கு வந்து
ஒன்பது வருடம்
யாரும் அவரை
மதித்தே நடப்பார்!

ooo

அறுபது நாள் பொறுமையுடன்
வேலைசெய்த ஆலிம்
ஸாஹிபவர்
போய்வர ஊருக்கு
பொறுப்புடனே
டிரஸ்டியிடம் போய் லீவு
கேட்டார்!

ooo

ஆரிப் ஹாஜியாரின் ஆண்டுக்
கத்தமுண்டு!
போற வாரதெல்லாம் பிறகு
பார்க்கலாம்!
சீறினார் டிரஸ்டி சிரித்தார் ஆலிம்!

ooo

அடுத்த வாரம் மனைவிக்குத்
தீட்டு வரும் எடுக்கும் லீவிலும்
எப்பயனும் கிடையாது!
விடுங்கள் என்னை
வீடு போய் வருகிறேன்

ooo

ஆலிம் வேறு
நாம் பார்ப்போம்
டிரஸ்டி சொன்னார்
அவ்வளவுதான்
வேறு பள்ளி எனக்குண்டு
ஆலிம் சென்றார்!

ooo

நன்றி : நவமணி - 11-07-1999





## ஆயிரமாம் ஆண்டின் அறிவுரை!

இரண்டாயிரமாம் ஆண்டை
எதிர்நோக்கும் மானுடனே!
ஆயிரமாம் ஆண்டின்
ஆரம்பம் பேசுகிறேன்
999 எனது முந்திய நண்பன்!
காலத்துக்கும் காலத்துக்கும்
கனக்ஷன் உண்டு
அதனால்.....
காலமே கதைக்கிறேன்

ooo

என்னை அரவணைத்த
இன்னுயிர்கள் இன்றில்லை
உண்மை பேசுவார்
ஒருவரை வஞ்சிக்கார்
கஷ்டத்துக்குதவுவார்
இன்ப மனோநிலையில்
எத்தனையோ
கோடிப் பேர்
என்னில் வாழ்ந்தார்கள்
எத்தனை நிம்மதி?

ooo

இரவில் மானுடனும்
நிம்மதியாய்
துயில் கொள்ளும்
பரபரப்பின்றியே
பாதைகள் மௌனிக்கும்!
பிரயாணிகள் வாகனத்தில்
சுறுசுறுப்பாய் பயணிப்பார்
குண்டுப் பீதி கண்டதில்லை!
பயணத்திலும் நிம்மதிதான்!

ooo

லஞ்சம் என்றால்
மானுடமே அஞ்சும்!
கெஞ்சியவன் பசிக்கு
கஞ்சி உடன் கொடுப்பார்
மெஞ்ஞானம் விஞ்ஞானம்
மிகவேகமாக முன்னேற்றம்
அஞ்சாமல் வாழ்கின்ற
அமைதி உலகெங்கும்
மிஞ்சி நிற்கின்ற
மிருகம் பறவைகட்கும்
கிஞ்சித்து பயமில்லை
ஆயிரமாம் ஆண்டின்
ஆரம்பக் கட்டளைகள்

ooo

ஆயிரத்தோடிணைந்து
தொள்ளாயிரம்
தோன்றுகையில்
அழுக்கு! அழுக்கு!
மக்கள் மனம் அழுக்கு!
குண்டுப் புரளி
கொலை கொள்ளை
ஏமாற்று
எல்லாம் நிரம்பி சமூகம்
பாழாச்சு!
இன்னும் சில நாட்களில்
இரண்டாயிரமாம் ஆண்டு
இன்டநெட் யுகம்!
மானுடமே மனிதத்தை
மதி! அன்பைப் பருமாறு
ஆயிரமாம் ஆண்டின்
அன்புக் கட்டளைகள்
2000மாம் ஆண்டை
இனிதே மதி

ooo

நன்றி : நவமணி -
15-08-1999



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலக்ஷன் ஸ்பெஷல்!

ஒன்றாயிருந்த
குடும்பம்
இரண்டாகிப் போகும்
வென்றவனும்
தோற்றவனும்
ஒன்றாவான்
வெளிச்சத்தில்
நின்றவன் மட்டும்
நிர்க்கதியில்!
என்றும் இதே
கதைதான் - அந்த
எலக்ஷன் வருகிறது

○○○

அண்ணனும் தம்பியும்
அடிப்பான் உதைப்பான்
பொலிஸில் கூட
புகாரும் செய்வான்
கம்பிக்கூடு! இல்லையேல்
எம்பி வீடு!
எல்லாம் இந்த எலக்ஷன்
கேடு!

○○○

வீதி அமைப்போம்
விவசாயக் கடன் தருவோம்
நீதி நியாயம்
நிறைவேற்றித் தருவோம்
காது வெடிக்கக் கத்துவார்!
மேடை முன்னால்
கை தட்டி சந்தோஷம்!
ஓட்டை எடுத்தால்
உல்லாசம்!
வாக்குறுதி
ஜலதோஷம்!

○○○

யுத்தம் தீர்ப்போம்
இந்தப் பேச்சுக்குள்
பத்து பீரங்கி
பதறி வெடிக்கிறது
சத்தியம் பேச்சல்ல
சனங்களின் வோட்டுக்குக்
குத்தகைப் பேச்சு!
கொஞ்ச நாளைக்கே!

○○○

தம்பி சுவரில்
போஸ்டர் அடிப்பான்
எம் பி மினிஸ்டர்
எல்லோரும் வருவார்
கொம்பு முளைத்தோர்
கூடத் திரிவார்!
வம்பளந்து வாயடிப்பார்
வாக்கு முடிந்தால்
சாக்கு நிறைந்தால்
பஜ்ரோ பறக்கும்!
செல்போன் கத்தும்!
பழைய குருடி
கதவைத் திறடி!

○○○

எலக்ஷன் என்றால்
இன்றைய மழை மூடம்!
பெய்து விட்டு ஓய்ந்துவிடும்
கூறிவிட்டு மாறுவதுதான்
இன்றைய
எலக்ஷன் ஸ்பெஷல்!

நன்றி : நவமணி - 12-12-1999



மௌலவி காத்தான்குடி பௌஸ்

# அற்புத இரவு லைலதுல் கத்ர்!

குகைக்குள் ஏன்
இந்தக் குர்ஆன்
இறங்கியது?
வானோக்கி
நிற்கும் ஹிரா மலை
வானவர் ஜிப்ரீலுக்கு
வசதியாக
இருந்ததற்காகவா?
இங்கு குர்ஆன்
இறங்கத் தொடங்கியது!

○○○

இரகசியமாய் இஸ்லாம்
பரப்பப்படுவதால்
குர்ஆனும் குகைக்குள்
பரபரப்பில்லாமல்
இரகசியமாகவே
இறங்கத் தொடங்கியதா?

○○○

இறங்கும் போது
இறஸூல் இருந்த
இடம் ஹிரா என்பதால்
அருமை ஜிப்ரீல்
அதைத் தெரிவு செய்தாரா?

○○○

இருள் படிந்த குகைக்குள்
இறைவேதம் இறங்கியது
இருள் படிந்த
இடமெல்லாம்
அருள்வெளிச்சம்
தருவதற்கா?

○○○

குகைக்குள் உரைக்கின்ற
குர்ஆன் வசனமது
பகை கொண்ட உள்ளத்தில்
பளிச்சிடத் தொடங்கியதா?

○○○

முஹம்மதை ஜிப்ரீல்
இறுக அணைத்து
இறைவன் பெயரால்
ஓதுக என்றதால்
இறைத் தொடர்பு நபியுடன்
இறுக்கம் கொண்டதா?

○○○

இக்ரஹ் ஓதிடுக
என்ற முதல் வசனம்
திக்கெட்டும்
ஞானம் திகழ்ந்திடச்
செய்ததுவே

○○○

ஆயிரம் மாதத்தை
விடச் சிறந்த ஓர் தினமே
லைலதுல் கத்ராகும்!
அன்றைய தினமே
அருள்மறை இறங்கியது!
என்றும் நல்வாழ்வு
தொடரட்டும்
அதன் வழியில்

○○○

அழகாக வீடுகளில்
அலுமாரிக்குள்ளே
அடுக்கி வைப்பதற்கா
அல்குர்ஆன் இறங்கியது?

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்ததம் ஓதுவதற்கு
மட்டும் குர்ஆனை
கைக்கெடுக்கும்
நிலைமாற்றி
காலமும் ஓதி
கருத்தறிந்து
செயல்படுவோம்

OOO

வெள்ளைக் காரனின்
கையில் குர்ஆன்!
சொல்லவா வேண்டும்?
ஆராய்ச்சி செய்கின்றார்

OOO

அந்தோ பரிதாபம்!
முஸ்லிம் சமுதாயம்
கொஞ்சமும் குர்ஆனை
ஆராயாமல் வாழ்கிறது
இறைவன் கேட்கிறான்
இதயம் பூட்டியா
இருககிறது?
இது இறை வசனம்!

OOO

சிந்திப்போம்
லைலதுல் கத்ரை
சந்திப்போம்!
எந்தப் பொழுதிலும்
இறைமறையை ஓதிடுவோம்!
உணர்ந்திடுவோம்!

OOO

நன்றி : நவமணி - 02-01-2000

# பாவத்தைக் கரைக்கும் ரமழான்!

வானலை வழியாகத்
தேன் ஒலியைப்
பருகின்ற
வானொலி
ரசிகர்காள்
அனைவர்க்கும்
ரமழான் பெருநாள்
வாழ்த்துக் கூறி
என் கவிதை
தொடங்குகிறேன்

OOO

பாவம் என்பதை
பள்ளிப் பருவத்தில்
யாராரோ - நமக்குச்
சொல்லித் தந்த
ஞாபகம்
இன்னும் நமக்குண்டு!

OOO

பாவம் செய்தால்
பாம்பு கடிக்குமென
பயமுறுத்திய
பாவம் எல்லாம்
இன்னும் கண்ணுக்குள்
இருக்கவே செய்கிறது
பாவத்தை நபிகளார்
படம் பிடித்துக் காட்டியதால்

OOO

பாவம் என்றால்
பயப்பட வேண்டும்தான்
ஆனால்
பயத்தைக்
காற்றுக்கல்லவா
கடன் கொடுத்து விட்டோம்
- அதனால்

OOO






அகிலம் எங்கும்
அநியாயம் ! அக்கிரமம்!!
சோகங்கள்! சோதனைகள்!!
கொஞ்சமா அல்ல
கோடி! கோடி!!

OOO

பாவம் செய்தவன்
ரமழானைக் கண்டு
பயப்படுகின்றான்
இல்லை
பாவமே ரமழானைக்
கண்டு பயப்படுகின்றது

OOO

ரமழான் பாவத்தை
சுட்டெரிக்கும் மாதம்

OOO

சூரியன் உடம்பைச்
சூடாக்கும்
சுட்டெரிக்கும்!

OOO

தீ தேகத்தைச்
சூடாக்கிப்
பொசுக்கி விடும்!

OOO

ஆனால்..... அவைகளால்
பாவத்தைப் பொசுக்க
முடியவில்லை

OOO

ரமழானால் மட்டும்தான்
பாவத்தைப் பொசுக்க
முடிகிறது!

OOO

புண்ணாகிப் பாவத்தால்
புரையோடிப் போனவர்
கண்ணிய ரமழானில்
மன்னிப்புப் பெறாதிருப்பின்
அன்னாரின் வாழ்வு
அநியாயமாகி விடும்-என
வானவர் ஜிப்ரீல்
வாய்திறக்க
அண்ணல் நபிகள்
அதற்கு ஆமீன்
என்றார்கள்

OOO

பாவம் தௌபா!
பாவம் துஆ!
தௌபா பாவம் என்று
தொடராமல்
பாவத்தை விடுவோம்!
தௌபாச் செய்வோம்!

OOO

என் இனிய மானுடமே!
கண்ணிய ரமழானில்
மன்னிப்பு
இல்லையென்றால்
என்னாகும் நம் வாழ்வு?
எண்ணிப்பார்!
இதயத்தை ஒருமுறை
கேட்டுப் பார்!

OOO

அடியான் ஒருவன்
மடிகாலில் கிடந்து கொண்டு
வடித்துக் கண்ணீர்
வாய் திறந்து பிரார்த்திக்க
வெடிக்கிறது - அவன்
நெஞ்சம் துடிக்கிறது
அவன் பாவம்
முடிவில் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவம்
முடிந்தே போகிறது
உள்ளம் ஒளியில்
விடிந்து நிற்கிறது!
அந்தஸ்து - ஒருபடி
உயர்ந்து நிற்கிறது!

○○○

நிலத்தின் முதுகில்
நிதமும் பாவத்தால்
நில நடுக்கம்!
புயல் காற்று!
வெள்ளப் பிரளயம்!
வேதனை யுத்தங்கள்!

○○○

அலையும் மனதுக்கு
அமைதி காண்பதற்கு
களம் தந்த ரமழானே!
நலம் தந்தாய்!
வளம் தந்தாய்!
உளத்தில்
ஒளி தந்தாய்!

○○○

இனிய ரமழானே!
இன்று நீ பிரிந்தாலும்
எத்தனையோ
இதயத்தின் பாவத்தைச்
சுத்தப்படுத்திவிட்டாய்
சத்தியமாய் - நீ
உத்தம மாதம் தான்!

○○○

நீடிய வாழ்வில் ரமழானே!
நீ வரவேண்டும்
எனக் கூறி
பாடிய கவிதையை
மூடிடுகின்றேன்

○○○

**08-01-2000 நோன்புப் பெருநாளன்று இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை கவியரங்கில் பாடப்பட்ட கவிதை**

# குர்ஆனின் குரல்!

எழுந்த யானைப் படையை இறைவன்
எப்படி அழித்து விட்டான்?
முழுமையாக இந்த அழிவை
நினைத்துப் பார்ப்பீரா?
வலுத்த அவர்களின் சூழ்ச்சியை இறைவன்
வீணாக்கி விடவில்லையா?
தலைமேலாலே பட்சிக் கூட்டத்தை
இறைவன் அனுப்பி வைத்தான்
வளைந்து பறவைகள் சுட்ட கற்களை
வாயால் எறிந்ததுவே!
நிலையே அற்ற கதிர்களைப் போல
நிலத்தில் அழிந்தனரே!

**நன்றி : ஜும்ஆ இதழ் 2000 ஜுன்**





# உம்மத்தே விழித்தெழு!

முப்பந்தைந்தை தாண்டி விட்ட
முஸ்லிம் குமர்கள் நிலை என்ன?
தப்புத் தப்பாய் செலவழிக்கும்
தனவந்தர்கள் நோக்கென்ன?

○○○

காணி பூமி வீடென்றும்
கடைகள் கார்கள் காசென்றும்
ஆணித்தரமாய் மாப்பிள்ளைமார்
அடுக்கும் கேள்விப் போக்கென்ன?

○○○

வசதி படைத்தோர் ஹோட்டலிலே
வாழ்வைத் தொடங்கும் நிலை கண்டு
தசையில் இரத்தம் உறைந்தவராய்
தவிக்கும் குமர்கள் நிலை என்ன?

○○○

மஹரைக் கொடுக்கும் மணவாளன்
மணப் பெண்ணிடத்தில் பணம் கேட்டால்
சுகமாய் வாழ்வு தொடங்கிடுமா?
சுன்னத் அங்கு இடம்பெறுமா?

○○○

விருந்து விருந்து எனச்சொல்லி
வீணாய் பணத்தை வீசாமல்
பொருந்தும் வலீமா விருந்து வைத்து
புசிக்கக் கொடுங்கள் சுன்னத்து!

○○○

வாகன வசதி இருந்தால்தான்
வரும் திருமண அழைப்பிதழ்கள்
சோகம் காணும் ஏழையவன்
சொந்தமாயினும் அழைப்பதுண்டா?

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம் குமர்கள் சீதனத்தால்
முடங்கிக் கிடப்பதை விட மேலாய்
இஸ்லாமற்ற இளைஞருடன்
இணைய ஈமான் விழிக்கிறதா?

OOO

முஸ்லிம் சமூக உம்மத்தே
முஸ்லிம் குமர்கள் திருமணத்தை
இஸ்லாமிய இளைஞருடன்
இணைக்க சமூகம் துணிவுறுமா?

நன்றி : தினகரன் - இஸ்லாமிய சுடர்
18-08-2000

## சுயநினைவு?

சுனாமியின்
பின்னர்
சுவாமியைச்
சுனாமி என்று
சொல்கின்றார்கள்

OOOO

நன்றி : நவமணி - 12-06-2005

## இலாபம்!

சுனாமியினால் சுயவாழ்வை
இழந்தவர்களை விட
சுய லாபம்
தேடியவர்களே அதிகம்!

OOOO





## செக் பொயின்ட்!

மன்னம்பிட்டி
செக்பொயின்ட்
ஆளையாள்
அடித்துக் கொண்டு
இறங்க ஆயத்தம்!

OOO

ஒருவர் கூட
இருக்க முடியாது
தெரிந்த விஷயம் தான்
நிறைந்து வழியும் பஸ்!
நிற்கத் தயார்
சுமைகள் தூக்கும்
தடபுடல்!

OOO

இறங்க வேண்டாம்!
இடி இடித்தால் போல்
பொலிஸ்காரர் ஒருவர்
சீறி நிற்கின்றார்

OOO

முன்னால்
ஐந்து பஸ்கள்
இறங்கிய சனங்கள்
முண்டியடித்து
கியூவரிசையில்

OOO

ஆணுக்கு வேறுகியூ
பெண்ணுக்கு வேறுகியூ
ஆமை வேகத்தில்
அணி நகர்கிறது!

OOO

கொளுத்தும் வெயிலால்
கொட்டும் வியர்வை!

ஆமி ஒருவர்
இறங்கச் சொல்லி
ஆணையிடுகின்றார்
படியில் நின்றோர்
பாய்ந்து இறங்கி
கியூவை நாடுகின்றார்

OOO

பஸ்ஸுக்குள் போங்கள்
பொலிஸ்காரர் ஒருவர்
பாய்ந்து வருகின்றார்
இறங்கியோர் மீண்டும்
பஸ்ஸுக்குள்ளே
ஏறி நிற்கின்றார்

OOO

வியர்வை நாற்றம்!
நெரிசல் பாரம்!
அழும் குழந்தைகள்
அந்தோ பரிதாதபம்!

OOO

முந்திய கியூவில்
முக்கால் குறைந்தது!
பந்தியில் வந்து
படைவீரன்
பகின்ட! பகின்ட!
இறங்கச் சொன்னான்!

OOO

பேக்கும் ஆளும்
வேகத்தோடு
இறங்க முனைகின்றார்
ஓடியே வந்து
வீடியோ பொலிஸ்
விரைவாய் படம்
பிடிப்பார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தை கூட
வீடியோ படத்தில்
குறிதவறாது!

OOO

களிசனுக்குள்ளே
கையை விட்டு
காவலர் பரீட்சிப்பார்!
காலில் போடும்
கால் உறையை
கழட்டி சோதிப்பார்!

OOO

அடையாள அட்டையை
ஒருவர் பார்த்து
ஆளையும் பார்ப்பார்!
காவலர் கண்கள்
காட்டுத் தீதான்
பாவம் பிரயாணி!
பயந்து போவான்
கண்ணைக் கண்டதும்
திண்டதும் எரியும்!

OOO

அடுக்கிய உடுப்பைப்
பிரித்துப் போடுவார்!
பேணியின் மூடியைப்
பிரித்துப் பார்ப்பார்!

OOO

பெண்களைத் தனியே
பெண்காவலர்
பிரித்துப் பார்ப்பார்கள்!
மார்புக் கச்சையைப்
பிடித்துப் பார்ப்பாராம்!

OOO

ஒரு வயதுப்பிள்ளை
பால் போத்தலினை
குலுக்கிப் பார்ப்பார்கள்! பாவம்
குடிக்க மாட்டார்கள்!

OOO

சொக்லட் சுவிங்கம்
பழங்கள் என்றால்
கொஞ்சம் எடுப்பார்கள்!
கெஞ்சிக் கொடுத்தால்
மறுத்து விடுவார்கள்!

OOO

கண்ணாடி வைத்து
பஸ்ஸின் கீழே
குண்டு பார்ப்பார்கள்! கருவி
கொண்டு பார்ப்பார்கள்!

OOO

குண்டு பிடிக்கும் நாயை
பஸ்ஸில்
கொண்டு செல்வார்கள்
ஒன்றுமில்லை
என்று சொல்லி
கூட்டி வருபவர்கள்!

OOO

அலி என்பார்
கொழும்பு வந்தார்
அடையாள அட்டை
இல்லாயாம்!
புலியென்றார்கள்
பிடித்து வைத்தார்

OOO

மட்டக்களப்பில் - அலி
மண்ணம்பிட்டியில் புலி
விட்டாரோ தெரியாது
வேதனை!

OOO

தமிழ் சோதரர்
என்றால் போதும்





செக்கிங்
தடபுடலாய் நடக்கும்!
செக்கிங் முடிந்தது
செக்கன் 120
முடிந்து விட்டது!

OOO

இரண்டு மணிநேரம்
அறியாயம் என்று
பேசிக் கொள்வார்கள்!
மனசால்
ஏசிக் கொள்வார்கள்!

OOO

மண்ணம்பிட்டியில்
லொறிகள் இருநாள்
கண்ணை விழித்திருக்கும்!
காவலிலே நிற்கும்
ஏற்றி இறக்கி
சாமான் எல்லாம்
தாமாய் பரிதவிக்கும்!

OOO

இந்தச் சோதனை
என்று முடியும்?
ஆண்டவன்தான்
அறிவான்?

OOO

நன்றி : தினகரன்
வாரமஞ்சரி 17-09-2000

# மேன்மை நபியின் மிஃறாஜ்!

இறை அமரர் மீக்காயில் ஜிப்ரீல் வந்து
எம் நபிகள் நாயகத்தின் சுகம் வினாவி
கறையற்ற இதயத்தை ஸம்ஸம் நீரால்
கழுவியதில் இஸ்லாத்தின் யக்கீன் பதித்து
நிலையான க.'.பா முன் புறாக்கில் ஏற்றி
நேராக பைதுல் முகத்தஸ் சென்று
இறையாணைப் படி அன்னார் வான் அடைந்தார்
இனிய வழித்துணையாக ஜிப்ரீல் சென்றார்

OOO

முதல் வானில் ஆதம் நபியைக் கண்டார்!
முகம் மலர வரவேற்றார் இரண்டாம் வானில்
குதறத்துப் பிறப்பான ஈஸா நபியும்
கூடவே யாக்கூபும் இருக்கக் கண்டார்!
வதனத்து அழகுடைய யூசுப் நபிகள்
வரவேற்றார் மூன்றாம் வானில் நின்று
இதமாக வான் நான்கில் இத்ரீஸ் நின்றார்
இது கடந்து ஹாரூனை ஐந்தில் கண்டார்!

OOO

ஆறாம் வானத்தில் மூஸா நபிகள்
அழகுற வரவேற்க நபிகள் கண்டார்!
நேராக வான் ஏழை அடைந்த போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசர் இபுறாஹீம் நபியைக் கண்டார்!
பாரினிலே சிறுவயதில் இறந்து போன
பாலகர்கள் அனைவரும் நபி இபுறாஹீம்
பூரண அரவணைப்பில் இருக்கும் வனப்பை
புகழ் ஜிப்ரீல் விளக்க நபி விளங்கிக் கொண்டார்!

○○○

சுவனத்துக் காட்சியெல்லாம் நபிகள் கண்டார்
சுவையூட்டும் பால் பருகித் தாகம் தீர்த்தார்
அவலமுறும் நரகத்தை நபிகள் கண்டார்
அதில் இளைக்கும் வேதனையை நபிகள் பார்த்தார்!
துவக்க முதல் வழிவந்த ஜிப்ரில் பின்னர்
தூயமரம் ஸித்ரதுல் முன்தஹாவில்
துணியாமல் - "நபிதாஹா" போங்கள் என்றார்!
தாண்டிவர என்னாலே முடியாதென்றார்!

○○○

அண்ணலெங்கள் நபிகளார் உருவமற்ற
அல்லாஹ்வின் சந்நிதியைச் சந்தித்தார்கள்!
பண்பான பரிசாக ஐந்து நேரப்
பொன்னான தொழுகையைக் கொண்டு வந்தார்!
அன்று முதல் மிஹ்ராஜின் சின்னமாக
ஐங்காலத் தொழுகையை அமைத்துத் தந்தார்!
என்றும் நாம் தொழுதிடுவோம் மிஹ்ராஜ் நினைவாய்
இறுதிவரை தொழுகையினை விடாதிருப்போம்

**நன்றி : தினகரன் - இஸ்லாமியச் சுடர் 12-10-2001**

# நீதியில்லை !

புதிய ஆயுதத்தைப்
புடம் போட்டுப் பார்ப்பதற்கு
அதிசக்திவாய்ந்த இடம்
ஆப்கானிஸ்தான்தான்
இதில் என்ன சந்தேகம்?
எக்ஸ்ரே எடுத்து விட்டார்!
வதிவிடத்தைத் தாக்கி விட்டு
விதி என்பார்
புதினமில்லை!

○○○

சதி செய்யும்
சண்டித்
தனங்களுக்கு
கதியாவோர்
பொது மக்கள்!
பதிவுசெய்!
மனச்சாட்சி பாரினில்
நீதியில்லை!

○○○

**நன்றி : இடி இதழ் - 03-11-2001**



மௌலவி காத்தான்குடி பௌஸ்

# அமெரிக்காவிலிருந்து ஆப்கான் வரை!

அந்தத் தலை(ப்பாக்)குள்
உஸாமாவின் அஸாவுக்குள்
இந்த அமெரிக்கா
இப்படிக் கிறுகியதா?

○○○

அன்பான உஸாமா
அமெரிக்காவைத்
துண்டித்து வாழத்
துணிந்ததும் ஏனோ?

○○○

காலம் காலமாய்க்
கலிமாச் சொன்னவன்
கோலமாய் இறப்பதைக்
குத்திக் காட்டியதா?

○○○

ஆயுத மழையின்
அவலம் உறுத்தியதா?
பாயும் குப்ரின்
பாதங்கள் தெரிந்ததுவா?

○○○

அல் அக்ஸா மண்ணின்
அகமியம் உறுத்தியதா?
முல்லா உமர் போன்றோர்
மூளை உசுப்பியதா?

○○○

துப்பாக்கி கைக்கெடுத்து
துடைத்தது போதும்
அப்பாவி உயிர்களுக்கு
ஆளுமை கேட்டீரா?

○○○

மன்னர் ஆட்சிகளில்
மழுங்கும் இஸ்லாத்தின்
பின்னணி கண்டு
பலத்தைச் சேர்த்தீரா?

○○○

ஹலோ புஷ் ஜனாதிபதி
கிலோ கணக்கில்
வெடிகுண்டு!
பலோ பண்ணிப் போட்டு
பலன் என்ன கண்டீர்?

○○○

அதாபு தரும் அமெரிக்கா
அசுரப் போக்குக்கு
சதாம் தந்த பாடம்
சரித்திரத்தில் மறந்திடுமா?

○○○

இஸ்ரேலைத் தூண்டி விட்டு
இஸ்லாமியரை
அழிக்கின்ற
புஷ் போன்றோர் போக்குக்கு
பூமி பதில் சொல்லும்!

**நன்றி : யாத்ரா**
**ஒக்டோபர் - டிசெம்பர்**
**2001**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தை மனம்!

பூமுகத்தில்
முகம் புதைத்த
புன்னகை
போலியில்லை!

ooo

கள்ளமே அறியாத
கண் பார்வை!
உள்ளத்தின் உண்மை
முகமேடு

ooo

கற்கண்டடை
நீ கண்டு வாய்திறந்து
சொற்கொண்டு
பேசுவது
சொக்க ஞானம்!

ooo

அம்மா என்று
அழைத்திடுவாய்!
சும்மா உள்ளம்
சுவிட்ஸாகும்!

ooo

காலை உயர்த்தி
கடந்து வர
பாலைவனத்தின்
பயிர் தெரியும்!

ooo

குழந்தை உள்ளம்
கோன்இறையின்
நலங்கள் காணும்
தலமாகும்!

ooo

நன்றி : செந்தூரம் தினகரன்
வாரமஞ்சரி விசேட இணைப்பு
20-09-2002

## ஆய்வு!

அமெரிக்க
வெள்ளை மாளிகையின்
உள்நிறம்
சிவப்புத்தான்

oooo





# ஏந்தல் நபியை எங்கு காண்போம்!

அறியாமை இருளினிலே மக்களெல்லாம்
அநியாயப் போர்வழியாய் வாழ்ந்த போது
நெறிதாங்கி ஒளியேந்தி நிலத்தில் வந்த
நேசரே நாயகமே! உங்கள் வரவு
அறிவொளியை உலகத்தில் பரப்பக் கண்டோம்!
புரிந்துணர்வில் பூவுலகை வாழச் செய்த
பூமான் நபியே! நாம் எங்கு காண்போம்?

ooo

பெண்குழந்தை பிறந்தவுடன் குழியிலிட்டு
பெற்றவள் காணாமல் மூடிவிட்ட
அஞ்ஞான சமூகத்தில் நபிகள் தோன்றி
அளப்பரும் அறிவுரைகள் வகுத்ததாலே
கண்மூடிச் செயல்தம்மைக் கண்டித்தார்கள்!
கருத்துள்ள சமூகத்தை சிருஷ்டித்தார்கள்!
மண்மூட மடமைகள் புன்னகைத்தீர்!
மாநபியே உங்களை எங்கு காண்போம்?

ooo

சத்தியமே தெரியாது சண்டையிட்டு
சரித்திரமே அழிகின்ற போது நபியே
உத்தமராய் உதித்தீர்கள் உலகின் கண்ணே
ஒருகோடிச் சமூகத்தில் ஒருத்தராக
இத்தரையில் தோன்றியதால் அறிவைக் கண்டோம்
இழிசெயல்கள் மூலைக்குள் ஒழியக் கண்டோம்
சுத்தமாய் சிலை வணக்கம் ஒழித்து நின்ற
சுந்தர நபியை நாம் எங்கு காண்போம்?

ooo

பல்துலக்க, முகம்கழுவ, தலையை சீவ
பாதணிகள் அணிவதற்கு, பள்ளி சென்று
உள்நுழைய வழிமுறைகள் - உமிழ்நீர்த்துப்ப
ஒழுங்குமுறை சொன்னீர்கள் தின்ன உண்ண
நல்லவனாம் மனைவியிடம் நாடும் பாங்கும்
நம் செல்லக் குழந்தைகளை நடாத்தும் பாங்கும்
செல்வத்தைச் செலவு செய்யச் சிறப்புச் சொன்ன
செம்மலே நாயகமே! எங்கு காண்போம்?

நன்றி : மீலாதுன் நபி நினைவு மலர் 2002 நபவிய்யா இஸ்லாமிய
இளைஞர் இயக்க வெளியீடு - மள்வானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய் முத்தம்!

அன்புக் குழந்தையே!
அருமைக் குழந்தையே!
முத்தம் கொடுப்பேன்
முகம் மலர்வாய்!

○○○

உந்தன் முகத்தில்
ஒளி பிறக்கும்
கொஞ்சக் கொஞ்ச
நெஞ்சு இனிக்கும்!

○○○

சாந்தி முகத்தை
சார்ந்து நின்றாய்!
நீந்தி நீந்தி
ஓடி வாராய்!

○○○

ஏந்தி உன்னை
முத்தம் கொடுப்பேன்!
சாந்தத்தோடு
சிரித்துக் கொள்வாய்!

○○○

பாசக் கயிற்றின்
நேசக் கரமே ஆசையோடு
அணைத்துக் கொள்வாய்!

○○○

மாசில்லாத
மனசு கொண்டாய்!
நேசமே உன்னை
முகர்ந்து கொள்வேன்

**நன்றி : செந்தூரம் தினகரன்**
**வாரமஞ்சரி விசேட வெளியீடு**
**13-10-2002**

# மனித நலம் காணும் புனித நோன்பு!

மௌலவி காத்தான்குடி பௌஸ்

தபால்காரன்
கடிதம் கொடுத்து
மங்கை படித்த மடலல்ல!
மர்யமின் மகன்
ஈஸாவின் பிறப்பு
ஈமெயிலின் இன்னொரு
"இஸ்டைல்" இஃது
இறைவனின் குத்ரத்
ஈஸா நபி வருகை!
மர்யமின் நோன்பு
பேசாது - கதைக்காது
மௌனித்த
மௌன விரதம்

○○○

நாம் நோற்கும் நோன்பு
பதினான்கு மணித்தியாலம்
படைத்தவனுக்காக
பசி தாகத்தை
அடைந்து
பதவியை அடைவதாகும்!

○○○

காவேரி நதிக்காக
காத்துக் கிடக்கும்
புசிக்காத புரட்சியல்ல!
தண்ணீர் தாங்கிகளில்
உச்சிக்கே ஏறி துச்சமென
உயிரை மதிக்கும்
துணிகரச் செயலுமல்ல



படையை வை! என்றும்
படையை எடு! என்றும்
பாய்போட்டு பருகாது - புசியாது
பதாதை
தூக்கும் பணிகளுமல்ல
புனித நோன்பு இனிதாக்கி
இதயத்தைக் கனிவாக்கும்
அமைப்பு!

○○○

பார்த்தல் - கேட்டல்
நுகர்தல் - ருசித்தல்
தொடுத்தல் போன்ற
புலன்களுக்கு
அன்பால் - அடக்கத்தால்
அணைபோடும்
அறிவு வாய்ப்பு!
அரிய வாய்ப்பு!
அருமை ரமழான்

○○○

பசிக்குப் புசிக்காது
பக்குவத்தைப்
பெற்ற நோன்பாளி பாமரன்!
எண்ணங்களை அடைந்து
இதயத்தால்
நோன்பிருப்போன்
இன்ஸானின் உத்தமன்!
எண்ணமே இதயத்தில் இறை
திக்ராய்
ஒன்றித்த நோன்பாளி
மனிதருள் மாமனிதன்!

○○○

உத்தமனின் நோன்புக்கு
சத்தியமாய்
உவமையில்லை!

○○○

அல்குர்ஆன் இறங்கிய
அற்புத மாதம் ரமழான் தான்
பள்ளிகள் விழித்து
துள்ளும் ஷைத்தான்
ஒழிவதும் ரமழான்தான்!
மனிதன் நலன்பெறும்
மகத்துவ நாளும்
ரமழான்தான்!

○○○

**நன்றி : தினகரன் ஆலமுல் இஸ்லாம்**
**08-11-2002**

# இல்லாமை!

மக்கள் நிம்மதியில்லாமல்
போராடுகின்றனர்
வாகனங்கள் பாதைகள்
இல்லாமல்
போராடுகின்றன.

○○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன அளவு மதிப்பீடு!

இனத்துக்குள் சமாதானம் வேண்டும்!
இருட்டறைப் பேச்சுக்கள் போதும்!
மனதைத் திறந்து பேசும்!
மக்கள் நெஞ்சை ஈர்க்கும்
பணத்தை நம்பி வாழும்
பசப்புக்காரர் நாளும்
இனத்தை விற்று வாழும்
இழிவைக் கொண்டார் நம்பு!

○○○

நான்கு இனமும் நாளும்
நாட்டில் வாழ வேண்டும்
காணும் துவேசம் சாகில்
கனவாய் உலகில் தோணும்
ஏனோ இனத்துச் சண்டை?
என்று இணைவோம் மனிதன்
வீணாய் இரத்தம் சிந்தி
விரயம் வாழ்நாள் யோசி!

○○○

சமயச் சண்டடை உரக்கும்
சாதிச் சண்டை கலக்கும்
இமயம் பாஷைச் சண்டை
இதற்குள் கறுப்பன் வெள்ளை!
நமக்குள் நாளும் தொல்லை!
நாடு பிடிக்கும் யுத்தம்
அமர்க்களத்தில் உலகம்
ஆழ்ந்தால் நீதி உறங்கும்!

○○○

சட்டம் உலகில் வெல்லும்!
சமயம் நீதி சொல்லும்!
பட்டம் பதவி புகுந்து
பாதி வாழ்வைக் கொல்லும்!
திட்டம் இல்லா மனிதன்
தினமும் தவிப்பான் நஷ்டம்!
கட்டம் கட்டம் பார்த்து
கனிய வேண்டும் இதயம்!

○○○

நன்றி : வீரகேசரி வாரவெளியீடு - 06-07-2003







# பிட்டு வாங்கிய குட்டு!

தேங்காய் போட்ட பிட்டென்றால்
தின்பதற்கு ருசியாகும்!
பாங்காய்த் தேங்காய்ப் பிட்டென்றும்
பிரிக்க முடியா துறவாகும்
ஓங்கும் தமிழர் முஸ்லிம்கள்
ஒற்றுமைக்கு உதாரணம் தான்!
தீங்காய் யார்தான் குழிபறித்தார்?
தினமும் உறவில் தீக்குளித்தார்!

○○○

மாவும், சீனியும் கலந்ததுதான்
மணக்கும் நல்ல பனிசாகும்
சாவும் வாழ்வும் ஒரு வீட்டுச்
சரித்திரத்தின் நிகழ்வாகும்
தாவும் குரங்கின் மனப்போக்கில்
தமிழர் முஸ்லிம் வாழ்வில்லை!
யாவும் இறைவன் படைப்பென்ற
யதார்த்தம் உணரின் நிம்மதிதான்!

○○○

தமிழர் முஸ்லிம் உறவினிலே
தடம் பதிக்கும் நிலைகண்டு
செமிபாடற்ற சாத்தான்கள்
சக்திபோட்டுத் திரிகின்றார்!
திமிங்கிலமாய் சுகவாழ்வை
தின்றுபோடப் பார்க்கின்றார்
நிமிடம் தோறும் தமிழ் முஸ்லிம்
நிம்மதிக்காய்ப் பிரார்த்திப்போம்

நன்றி : வீரகேசரி வாரவெளியீடு
03-08-2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருநூறு ரூபாயும் இருநூறு கேள்வியும்!

இருநூறு ரூபாய்
ஏன் அடித்தாரென
மனமெல்லாம் கேட்குதடா!
ஏழை
மடிநீட்டி அலையுதடா!
செருகிய கண்ணாடி
இருநூறு ரூபாயில்
சுருட்டியே தாரான்டா!

○○○

கடையில் இருநூறைக்
கண்டதும் முதலாளி
மேல் கீழ் பார்க்கானடா!
அதை
மீண்டும் தருவானடா!
நடையில் மாற்றிட
நாளும் அலைகிறான்
விடையின்றிப் போனதடா!
பணம்
வியர்வைக்குள்
வெந்ததடா!

○○○

மடிப்புக்குள் அடங்காது
மங்கியும் போகுது
வங்கியும் திரும்புதடா
இருநூறு வந்து
பயனேதுடா?
படிக்கும் பிள்ளையின்
பால் வாங்கக்
கொடுத்தாலும்
பாதியில் திரும்புதடா!
இருநூறு
பிழையென்று வருகுதடா!

○○○

கழித்தாலும் காசு!
கிழித்தாலும் காசு!
கணக்கில் அடங்குதடா!
இருநூறு
கணக்கேயில்லையடா!
நலிந்திடும் நாட்டில்
நோட்டிடும் அரசு
நோட்டமாய்
அடிக்கட்டும்டா - அது
நுகர்வோரைக்
கவரட்டுமடா!

நன்றி : வீரகேசரி வாரவெளியீடு
31-08-2008

## கொக்கா?

அக்கா! அக்கா!!
கொக்கா! கொக்கா!!
சீ! கக்கா! கக்கா!!

○○○○

மென்பானத் தடையின் போது,
மீலாத் மேடையில் பாடிய கவிதை





# புஸ்! புஷ்! புஸ்!

புஷ்!
நீங்கள் அமெரிக்காவுக்கு
மட்டும் ஜனாதிபதியல்ல!
சகல உலகின்
சாவு மயானங்களுக்கும்
சர்வாதிகாரி!

○○○

எண்ணெய்க்காகத்
தன்னை அர்ப்பணித்த
புண்ணாகிப் போன
புத்திசாலி!

○○○

கம்பியூட்டரால்
உலகைப் பிடிக்கும்
வம்பு மாஸ்டர்!

○○○

மறு உலகுக்கு
ஆள் சேர்க்கும்
முழு உலக
புரோக்கர்!

○○○

உங்கள் பந்தாட்டத்துக்கு
பிலேயர் இல்லாததால்
டோனி பிளேயரை
சேர்த்துக் கொண்ட
பூண்டோடு அழிக்கும்
பூதம்கள்

○○○

ஈராக்கை உலகில்
வேறாக்கிக் காட்ட
கூரான ஆயுதத்தால்
குறிபார்த்த
குள்ள நரி!

○○○

ஜனநாயகம் செய்ய
ஈராக்கில் புகுந்து
பிணநாற்றம் தந்த
பேய் நீ!

○○○

வல்லரசு என்று
சொல்லி
ஈராக்கியரை
கள்ளனாக்கிய வம்பன்!

○○○

ஆயிரம் வருட
ஈராக்கிய நாகரீகத்தை
மியூசியத்தை உடைத்து
மிலேச்சத்தனம் புரிந்து
வரலாற்றைப் புதைத்து விட்ட
அனாகரீக அரக்கன் நீ!

○○○

வங்கியை உடைத்து
வளத்தை வீசி விட்டு
பொங்கி அதை அள்ள
போதித்த ரவிடி நீ!

○○○

கசிப்புக்காரன்
கடையுடைப்பான்
பைத்தியக்காரன்
ஆஸ்பத்திரிக்
கண்ணாடியை
அடித்து உடைப்பான்
கோட்சூட் போட்ட
நாசகரே! உங்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கும்
வித்தியாசம்
என்ன?

OOO

அரபுலக வாய்களுக்கு
பிலாஸ்டர் போட்ட
மாஸ்டர் பிறைன்
நீ!

OOO

இல்லை
உசாமாக்களால்
சதாம்களால்
கண்மூடும் தலைவன்!
மண்மூடும் மடையன்!

OOO

நன்றி : பலப்பிட்டிய அருஸின் ஜுமாஆ -
புஷ்ஷை நினைக்கையில் இரத்தம் கொதிக்கிறது
(புரட்சிக் கவிதைகள்) நூலில் பிரசுரமான கவிதை 10-10-2003

# ரமழான் பிறை பிறந்தது!



பிறை கண்டு ரமழானில்
பூ ஒன்று விரிகிறது!
பிறைகதம்ப நிகழ்ச்சியிலே
பா - சொல்லப் பகர்கிறது

OOO

கடலுக்குச் சொன்ற
ஹபீப் முஹம்மது
நடுக்கடலில் - வானை
நன்றாக நோக்குகிறார்!

OOO

அழகான ரமழான் பிறை
அவர் கண்ணில் தெரிகிறது
உளமாற
அல்ஹம்துலில்லாஹ்!
உணர்ச்சியுடன் கூறுகிறார்!

OOO

தோணி விளக்கின்
திரியை உயர்த்தி
காணுகிற மீனவர்க்கும்
கூ.. வைத்து
கையசைத்தார்!

OOO

எல்லா மீனவரும்
வான்பிறையைக் கண்டு
வல்லவனை வாழ்த்தி
வலித்தார் தோணியினை

OOO

சாபிறாக் கண்டு
சமைத்த சாப்பாட்டை
ஹபீப் முஹம்மது - பிரித்து
சஹர் செய்தார்!

OOO

நடுக்கடலில் தோணி
நடனம் ஆடுகையில்
நவைத்து ஸவ்ம ஹதின்
நிய்யத்து வைக்கின்றார்!

OOO

விடுத்த பிறையழைப்பில்
விஷேட நோன்பிருக்க
நடுக்கடலில் மீனவரும்
நாடியதே தீன் விஷேசம்!

OOO

ஷவ்வால் மாதத்தின்
சரிக் கடைசி நாளன்று
கொவ்வைப் பழமான
குழந்தை மேல்
குண்டொன்று!

OOO

காஸா முனையில்
கடும் இஸ்ரேல்
தாக்குதலில்
மூஸா ஸ.்.ரி
முகம் எரிந்து
உயிரிழந்தான்!
மூன்று வயது
மூஸா ஸ.்.ரியினை
ஈன்று வளர்த்தோர்
இதயமெல்லாம் அழுகிறது!

OOO

மக்கள் வெள்ளம்
மையித்தை சூழ்கையிலே
அக்கணம்தான் ரமழான் பிறை
அறிவிக்கப்படுகின்றது

OOO

ஏதோ அங்கு
இனம் தெரியா ஓர் அமைதி!
காது அடைத்திட
கத்தினான் அவன் தாய்!

OOO

ரமழான் தலைப்பிறையில்
ரத்தம் சிந்தினாய் மகனே!
உமது தியாகம்
ஒ! கியாமம்
வரையிருக்கும்!

OOO

மறுமையில் உன்னை
மலருகின்ற ஷஹீதாய்
இறுக அணைப்பேன்
இந்த காஸா பதில்
சொல்லும்!

OOO

வேகத்தை சோகத்தை
வெகுவாகக் குறைத்தது
ஆகாயத்தில் தோன்றிய
ரமழான் தலைப்பிறைதான்

OOO

ஓலைக் குடிசையிலே
வாழாக் குமர்களுடன்
நாளைக் கடத்துபவர்
நாபிலா ராத்தாதான்

OOO

பெக்டரிக்குச் சென்று
பகல் இரவாய்த் தொழில்செய்து
மக்கள் தேடுவதில்
மாதாந்தப் பொறுப்புக்கள்

OOO

முப்பது வயதினிலும்
மூத்த குமரை
ஒப்பேற்றி விடுவதற்கு
ஒருவழியும் தோணவில்லை!

OOO

எடுக்கின்ற சம்பளத்தில்
உடுப்பும் உணவும்தான்
நடுவானம் நெரிந்து
நலைகிறது கூரை!

OOO

என்று வாசலிலே
எண்ணியிருக்கையிலே
இன்று தலைப்பிறை
என்று ஓர் செய்தி

OOO

நாபிலா ராத்தா
நாயனே! ரஹ்மானே!
கோபிக்காது மக்களுக்கு
கொடுக்கின்ற
அல்லாஹ்வே!

OOO



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ரமழானில்
எவரையேனும் இரக்கமாக்கி
சந்திக்க வைத்து விடு
ஸக்காத்தை தந்திடட்டும்

○○○

தலைப்பிறையே எனக்கு
தகுந்த பதிலென்ன?
மூன்று குமர்களையும்
முடித்து வைக்க
வழியென்ன?

○○○

புனித ரமழான்
பூவுலகில் வந்ததனால்
கனியாத உள்ளம்மெல்லாம்
கனிகிறது இது உண்மை!

○○○

ஏழுவயதுச் சிறுவனும்
இனிய ரமழானில்
பதினான்கு மணித்தியாலம்
பசித்திருப்பான் பார்த்திடலாம்

○○○

சும்மா காலத்தில்
சோம்பிக் கிடந்தவரும்
தம்மால் முடிந்தவரை
தகைமையாய் அமல் செய்வார்!

○○○

ஒருவருக்கும் உதவாத
உலோபியின் மனநிலையும்
பொருள் வழங்க
மாற்றுகின்ற
புனித ரமழான் தான்!

○○○

ஏழைகள் துயர்த் துடைக்கும்
இதயத்தை ஏற்படுத்தும்
வேளையே ரமழான் தான்
விஷேச மாதம்தான்!

○○○

அல்குர்ஆன்
இறங்குவதற்கு
அல்லாஹ்வே
தேர்ந்தெடுத்த
நல்லதொரு மாதம்தான்
விஷேச மாதம்தான்!

○○○

அல்குர்ஆன் இறங்குதற்கு
அல்லாஹ்வே தேர்ந்தெடுத்த
நல்லதொரு மாதம்தான்
நாம் காணும் திரு ரமழான்!

○○○

பள்ளிகள் விழித்து
பக்தியை ஊட்டிடும்
சொல்லரிய மாதம்
சுந்தர ரமழான்தான்!

○○○

அன்பாலே அடியொட்டி
அகம் மகிழ்ந்து பள்ளியிலே
பெண்ணோடு பெண் சேர்ந்து
பேசி ஸலாம் சொல் மாதம்!

○○○

பித்றா அரிசியினை
பிரியமுடன் பகருகின்ற
சத்திய திரு மாதம்
ஷஹ்ரு ரமழானே!

○○○

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின்
“பிறைக் கதம்பம்” நிகழ்ச்சியில் நடைபெற்ற கவியரங்கில் பாடி ஒளிபரப்பப்பட்டது
2004 ஒக்டோபர் ரமழான் நன்றி ஐ. சேனல் முஸ்லிம் சேவை





# நோக்கம் நுணுக்கம்!

ஆதாயமில்லை யெனில்
அடியெடுத்து வைக்காத
நீதியே தொலைந்த காலம்!
நிம்மதி குறைந்த நேரம்!
மாதாவின் மருந்துக்கும்
மகன் வாசி பார்க்கின்ற
ஆகாத கமிஷன் காலம்
யாரைத்தான் நம்ப நேரும்?

○○○

பலகூடம் அமைத்தாலும்
பணம் தேடும் முயற்சிதான்
கல்லூரி கட்டிடினும்
காசடிக்கும் நோக்கம் தான்!
சொல்லொன்று செயல் வேறு
செய்பவனும் வீரன்தான்
எல்லாமே இன்றுலகில்
எச்ச சொச்சம் தேடத்தான்!

○○○

நன்றி : தினகரன்
கவிதைப் பூங்கா 26-10-2003

# நோன்புப் பெருநாள் வருக!

உலகின் மூலைமுடுக்கெல்லாம்
உனக்காக யாஅல்லாஹ்!
பலகோடி முஸ்லிம்கள்
பகலெல்லாம் பசித்திருந்து
நலமான ரமழான் நோன்பிருந்த
நாட்களுக்குப் பரிசு தரும்
அழகின் ஈத் பெருநாளே!
அருமை நோன்புத் திருநாளே!

○○○

அருமை ரமழான் இரவுகளில்
எழுந்து ஸஹரு செய்யுகையில்
இருட்டில் குண்டில் இஸ்ரவேல்
எறிந்து தீயை மூட்டுவதால்
பெருமையான பலஸ்தீனில்
பிரிந்த உயிரை நினைக்குகையில்
பெருமை ரமழான் பெருநாளே
பாரில் வந்தாய் வரவேற்றோம்

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூய நகராம் ஈராக்கில்
தீயோர் வைத்து குளிர்க்காயும்
தீய நெருப்பு ஜுவாலையிலே
தினமும் மடியும் முஸ்லிம்கள்
வாயில் நோன்பின் நிய்யத்தை
வைத்து உயிரைத் துறக்கையிலே
தூய ரமழான் பெருநாளே!
துயர்த் துடைக்க வந்திடுவாய்!

ooo

முஸ்லிம் பெண்கள் பிரான்ஸில்
முகத்தை மூட தலைமறைக்க
இஸ்லாத்துணர்வை எடுத்தோத
இன்று வந்த தடைகளுக்கு
விசுவாசத்தின் தோழியெல்லாம்
வேதனையால் அழும்போது
பசுமை ரமழான் பெருநாளே
பாரில் வந்தாய் வரவேற்றோம்

ooo

ஆப்கானிஸ்தான் வரலாற்றில்
ஆணித்தரமாய் தக்வாவை
ஆப்பிழுத்த குரங்குகள்
அதுவே பட்டு மாய்வது போல்
வாப்பா இல்லாப் பிள்ளைகளாய்
வாடும் ஷரீயத் கோலத்தைக்
காப்பாய் ரமழான் பெருநாளே
கண்ணீர் போக்க வருவாயே!

ooo

**நன்றி : தினகரன்**
**வாரமஞ்சரி நோன்புப் பெருநாள் கவியரங்கம்**
**14-11-2004**



மௌலவி காத்தான்குடி பௌஸ்

# முஹர்ரம் புத்தாண்டே!

முஹர்ரம் புத்தாண்டே
உன்னை
நாங்கள்
முகம்நோக்கி
வரவேற்றோம்
அஹ்லன்! வஸஹ்லன்!

ooo

சுனாமியினால்
உள்ளங்கள்
சுடுபட்டு
சுறுசுறுப்பே அற்று
சோம்பிக் கிடக்கின்ற
வேளையில்
முஹர்ரம் புத்தாண்டே
நீ
முன்னோக்கி வந்துள்ளாய்!

ooo

இந்த வருடம்
எங்கள் அனைவருக்கும்
இனிய ஆண்டாக
இருக்கட்டும்!

ooo

ஆர்ப்பரித்த கடலே - நீ
அமைதி அடைந்து
விட்டாய் - என
தீர்ப்பளிக்க முடியாமல்
திணறி நிற்கின்றோம்!

ooo

காரணம்...
மீண்டும் சுனாமி
மீண்டும் வருமோ? - என
மீட்டிப் பார்ப்போர்
மிக அதிகம்
புனித முஹர்ரமே!
உன்னில்
இனிய நிகழ்வுகளே
நடக்கட்டும்!
சுனாமியோ
சோதனை
நிகழ்வுகளோ
வேண்டாம்!
புனித முஹர்ரமே
வருக!

ooo

சுனாமியிலே
சொந்தத்தை
இழந்தவரும்
பந்தத்தை
துறந்தவரும்
பாலகர்கள்
ஆழிக் கடலில்
கால் - அடித்துப்
போவதைக்
கண்ணால்
கண்டவரும்
வீடுகளே இல்லாது
விழி மூட வாய்ப்பின்றி
வாழும் மக்கள்
மிக அதிகம்!
இந்த நேரத்தில்
முஹர்ரமே
உன்வரவை
வரவேற்றோம்!

ooo



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயுற்ற மனிதனை
பாய் போட்டு
வளர்த்தாட்ட
ஆஸ்பத்திரிகளே
இல்லை!
ஆழிப் பேரலையில்
ஆஸ்பத்திரி
அள்ளுண்டு போனது
முஹர்ரமே
உன் வரவால்
வைத்தியசாலை
வளமாக அமையட்டும்!

○○○

குற்றத்தை
விட்டிடுவோம்!
பாவத்தைச் செய்யாது
இறை உணர்வில்
தினம் வாழ்வோம்!

○○○

தட்டித் தடுமாறும்
சமூகத்தை கட்டியெழுப்ப
உடன்படுவோம்
முஹர்ரமே
உன் வரவு
சிறக்கட்டும்!

○○○

புரட்சி வீரர்
இமாம் ஹுஸைனின்
புதிய உணர்வோடு
சமூகத்தை எழுப்புவோம்!

○○○

**இக்கவிதை காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமா மண்டபத்தில் நடைபெற்ற முஹர்ரம் விழாவில் வானொலியில் நேரடியாக ஒலிபரப்பானது**

## பின்னேற்றம்!

நாங்கள் வாழ்வில் உழைத்து
மிச்சமில்லாமல்
போனதற்குக்
காரணம்
பஸ் நடாத்துனர்
மிச்சம் தராமல்
போனதுதான்!

○○○○





## மௌலவீ காத்தான்குடி பௌஸ் பாவலனுக்குக் கிடைத்த பட்டங்கள் பாராட்டுக்கள் சான்றிதழ்கள்

31-03-1989 பலப்பிட்டிய யௌவன சமாஜயவினால்
**சிறந்த தமிழ் அறிவிப்பாளர்**

1997ம் ஆண்டு மாத்தளை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸின் அகில இலங்கை ரீதியான கவிதைப் போட்டியில் வெற்றிறியீட்டி கௌரவ அமைச்சர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்களினால்
**பாராட்டுச் சான்றிதழ்**

1999ம் ஆண்டு அகில இன நல்லுறவு ஒன்றியத்தினால்
**சாமஸ்ரீ கலாஜோதிப் பட்டமும் பொன்னாடையும்**

2002 ஒக்டோபர் உலக இஸ்லாமிய மாநாடு இலங்கையில் துறைமுக அபிவிருத்தி, கப்பற்துறை அமைச்சு, கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் விவகார அமைச்சர் அல்ஹாஜ் ரவூப் ஹக்கீம் அவர்களினால்
**பாராட்டும் நினைவுச் சின்னமும்**

2003ல் எம்.எச்.எம். ஷம்ஸ் மன்றத்தினால் மர்ஹூம் ஷம்ஸ் நினைவுக் கட்டுரைப் போட்டியில்
**பாராட்டுச் சான்றிதழ்**

11-02-2003 பாணந்துறை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தினால்
**தத்துவ வித்தகர்**

2004ல் 51வது அஹதிய்யா விழா பாணந்துறை
**பேச்சாளர் பெருந்தகை விருது**

07-05-2005 பலப்பிட்டிய இஸ்லாமிய நலன்புரிச் சங்கம்
**தாஜுல் லிஸான் நாவேந்தர்**

07-05-2005 முன்னாள் இஸ்லாமிய கலாசார விவகார அமைச்சர் அல்ஹாஜ் அஸ்வர் அவர்களினால்
**பத்ருல் மில்லத் - சமூக மாமதி**
**ஆகிய கௌரவங்களாகும்.**


**தொகுப்பு :**
நூர் முஹைதீன் - பாவலர் பண்ணை - காத்தான்குடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்ணைப் பாவலனின் முன்னேற்றப் படிகள்

## எல்பங்களின் ஆய்விலிருந்து......



1997ம் ஆண்டு மாத்தளை முஸ்லிம் காங்கிரஸ் மாநாட்டில் நாடளாவிய ரீதியில் எழுதப்பட்ட கவிதையில் வெற்றியீட்டி பாராட்டுப் பெற்ற பௌஸ் மௌலவியை முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப் அவர்கள் கைகொடுத்து சந்தோஷப்படுத்திய போது எடுக்கப்பட்ட படம். அருகில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமும் காணப்படுகின்றார்.

**படம் : மாத்தளை யூரான்**



1999ம் ஆண்டு அகில இன நல்லுறவு ஒன்றியத்தால் மௌலவி பௌஸ் அவர்களுக்கு அல்ஹாஜ் கஹவத்தை ஹுசைன் பொன்னாடை போர்த்தியதுடன், சாமஸ்ரீ கலாஜோதி பட்டமும் வழங்கப்பட்டது. அருகில் கலையன்பன் றபீக்கும் காணப்படுகின்றார்.







2002ல் துறைமுக அபிவிருத்தி கப்பற்துறை அமைச்சு, கிழக்கு அபிவிருத்தி முஸ்லிம் சமய விவகார அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடு இலங்கையில் மௌலவி பௌஸுக்கு நினைவுச் சின்னத்தையும், பாராட்டுப் பத்திரத்தையும் துறைமுக அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீம் அவர்கள் வழங்குவதையும், அருகே ஜின்னா ஷரிபுத்தீன், அஷ்ரப் ஷிஹாப்தீன் ஆகியோரும் காணப்படுகின்றார்கள்.

**படம் : நூர்முஹைதீன்**



2003ல் பாணந்துறை இஸ்லாமிய மறுமலர்ச்சி இயக்கத்தினால் மௌலவி காத்தான் குடி பௌஸ் அவர்களுக்கு **"தத்துவ வித்தகர்"** எனும் பட்டம் மேல்மாகாண சபை உறுப்பினர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம். அஸ்லம் அவர்களால் வழங்கப்படுகின்றது. படம்ஷாஹுல் ஹமீட் ஹாஜியார் குர்ஆன் மத்ரஸா மீலாத் விழாவில் எடுக்கப்பட்டது.

**படம் : எம்.கே.எம். அஸ்வர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாணந்துறை ஹேனமுல்லை அஹதிய்யாவின் 51வது வருட விழா 2004ல் நடைபெற்ற போது, **“பேச்சாளர் பெருந்தகை”** எனும் பட்டம் பௌஸ் மௌலவிக்கு அஹதிய்யா தலைவர் அல்ஹாஜ் ஜாபிர் அவர்களினால் வழங்கப்படுகின்றது. அருகே அகில இலங்கை அஹதிய்யா சம்மேளன தேசிய தலைவர், அமைப்பாளர் தேசகீர்த்தி அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் அவர்களும் காணப்படுகின்றார்.



2005ல் பலப்பிட்டிய இஸ்லாமிய நலன்புரிச் சங்கத்தினால் சுனாமி ஒரு சோதனையா? படிப்பினையா? ஒலிநாடா வெளியீட்டு விழாவில் அதன் உபதேசி மௌலவி காத்தான்குடி பௌஸ் அவர்களுக்கு **“தாஜுல் லிஸான், நாவேந்தர்”** எனும் பட்டத்தை முன்னாள் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். அஸ்வர் வழங்குவதையும் இடதுபுறமாக கொடை வள்ளல் அஹ்மத் புவாத் ஹாஜியார் அவர்களும் வலதுபுறமாக பாணந்துறை பிரதேச சபைத் தலைவர் அம்றாஸ் ஏ. மஜீட் அவர்களும் பலப்பிட்டிய பிரதேச சபை உறுப்பினர் எம்.பி.எம். அப்றாரி ஆகியோர்கள் காணப்படுகின்றார்கள். **படம் : ஏ.எல்.எம். சத்தார்**

**படங்கள் ஒருங்கிணைப்பு : அல்ஹாஜ் எம்.எப்.எம். ஸைனி**










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாசிக்கப்படும் கவிதைக்குள்
## நேசிக்கப்படும் கவிஞன்......!
## கவிஞர் காத்தான்குடி பௌஸ்

- காத்திரமான கலைத்தொழிலுக்கு சொந்தக்காரன்
- ஆளுமை, அழுத்தம் இவைகளுக்குள் இலக்கிய உலகில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டிருப்பவன்.
- கன்னித்தொகுதியாம் இக்கவிதைத் தொகுதியின் மூலம் காத்தான்குடிக்கு மட்டுமல்ல கலைக்குடிக்கும் மூத்தவனாகிக்கொண்டவன்.
- முப்பதாண்டுகள் முகங்கொடுத்து முன்னெடுத்த இலக்கியங்களால் வீழ்ந்த சமூகத்திற்கு விழிகளை வைத்தவன்.
- கதை, கட்டுரை, கவிதைகளின் மூலம் பல பத்திரிகைகளின் பங்காளன்.
- வில்லுப்பாட்டு, உரைச்சித்திரம், பேச்சு, கவியரங்கு, ரமழான் சிந்தனை, பொன்மொழிகள் மூலம் வானொலி, தொலைக்காட்சிகளில் களம்கண்ட ஒரு கவிஞன்.
- 1989 முதல் 2005 வரை பெறப்பட்ட பட்டங்களும், வழங்கப்பட்ட விருதுகளுடன் பொன்னாடைகளுக்கும் பொருத்தமாய் போனவன்.
- கவிஞன், கலைஞன், எழுத்தாளன் மட்டுமல்ல மௌலவியும் கூட.
- கவிஞனின் பணி வளர காணிக்கை வாழ்த்துக்கள்.

- கலைநதி
கவிஞர் பதியதளாவை பாறூக்

TYPESET & COVER PAGE DESIGNED BY :
A. H. AHAMED ASLAM
VISUAL COMPUTER SYSTEM # 391, SCHOOL ROAD, HENAMULLA, PANADURA.
HOTLINE : 0714-171585 / E-MAIL : visualcomsystem@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org